இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 217 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 05 – திங்கள்கிழமை 18 மார்ச் 2024 – வெளியூர் 12+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 217 : Thiruvalluvar Year - 2055 - Panguni 05 - Monday 18 March 2024 - Dak 12+12 Pages ₹ 5.00

### குஜராத்தை மறைத்துவிட்டு - போதைப்பொருள் நடமாட்டம் குறித்து இங்கு அ.தி.மு.க. - பா.ஜ.க. அரசியல் நாடகம்!

# தேர்தல் பத்திர ஊழல்: பா.ஜ.க. முகத்திரை கிழிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘DT Next’ ஆங்கில இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கடும் குற்றச்சாட்டு!

**சென்னை, மார்ச் 18-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘DT Next’ ஆங்கில இதழுக்கு சிறப்புப் பேட்டி அளித்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்துள்ள அப்பேட்டியில், “தேர்தல் பத்திர ஊழல் பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்துள்ளது” என்றும் “குஜராத்தை மறைத்து போதைப் பொருள் நடமாட்டம் குறித்து இங்கு அ.தி.மு.க. - பா.ஜ.க. அரசியல் நாடகம் நடத்துகிறார்கள்” என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.**

நேற்றைய (17.3.2024) DT Next ஆங்கில நாளேட்டில் வெளியாகியுள்ள கழகத் தலைவர் -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்புப் பேட்டி வருமாறு:-

**கேள்வி:-** வாக்குறுதி அளித்த பல திட்டங்களைக் கடந்த மூன்றாண்டுகளில் உங்களது அரசு நிறைவேற்றியுள்ளது. சொல்லாதவற்றையும் செய்துள்ளது. இதில் உங்களுக்கு நெருக்கமான திட்டம் என்ன? உங்கள் ஆட்சிக்காலத்தின் ஏற்ற இறக்கங்களாக நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்?



**முதல்வர் மு.க.ஸ்டாலின் :- ஒரு தாய்க்கு தனது எல்லாக் குழந்தைகளும் சிறந்த குழந்தைகள்தான். அது போல், எனது அனைத்துத் திட்டங்களும் சிறப்பான திட்டங்கள்தான். முக்கியமான திட்டங்கள்தான். முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதல் கையெழுத்துப் போட்டது விடியல் பயணம் திட்டத்துக்காக. நகரப் பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தந்தது கோடிக்கணக்கான பெண்களுக்கு தினந்தோறும் பயனளித்து வருகிறது. மாதம் தோறும் 800 ரூபாய் வரை அவர்கள் சேமிக்கிறார்கள். இதைவிட முக்கியமாக, பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி உள்ளது. அதேபோல் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலமாக 1.15 கோடி பெண்கள் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற்றுள்ளார்கள். நாங்கள் இதனை அறிவித்த போது, நிறைவேற்ற முடியாத வாக்குறுதி என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்தார்கள். மிகக்கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும் மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்கியாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.**

### நான் முதல்வன் திட்டம் எனது கனவுத் திட்டம்!

**என்னுடைய கனவுத் திட்டம்தான், ‘நான் முதல்வன்’ திட்டம். படித்த இளைஞர்கள் அனைவர்க்கும் தனித்திறமையை ஏற்படுத்தி, அனைத்துப் பணிகளுக்கும் அவர்களைத் தகுதியானவர்களாக ஆக்கி வருகிறோம். அரசுப் பள்ளியில் படித்து விட்டு உயர்கல்வியை நோக்கி வரும் மாணவியர்க்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம் மாணவியர் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. மாணவியர்க்கு மட்டும் தானா, மாணவர்க்கு இல்லையா என்ற கோரிக்கையை ஏற்று, ‘தமிழ்ப்புதல்வன்’ என்ற பெயரில் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.**

**மதிய உணவுத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளோம். 17 லட்சம் பிள்ளைகள் தினமும் காலையில் வயிறார உணவு உண்ட பிறகு கல்வி கற்கிறார்கள். இதனைப் பார்க்கும் போது என் மனம் நிறைகிறது.**

**கேள்வி:-** முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போல. தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத மேலும் பல திட்டங்களை மீதமுள்ள உங்கள் ஆட்சிக்காலத்தில் எதிர்பார்க்கலாமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : - தமிழ்நாட்டின் நிதிநிலையை அதலபாதாளத்தில் விட்டுச் சென்றது முந்தைய அ.தி.மு.க. அரசு. தி.மு.க. ஆட்சிக்கு வந்த மூன்றாண்டு காலத்தில் அதனை இயன்ற அளவில் சரிப்படுத்தி, மேம்படுத்தி வருகிறோம். எனினும், தமிழ்நாட்டிற்குரிய வரிப்பங்கீடு, திட்டங்களுக்கான ஒதுக்கீடு உள்ளிட்டவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பாரபட்சமாக நடந்து கொள்கிறது. அதனால், தொடர்ந்து கடும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட சூழலிலும் மக்கள் நலன் காக்கும் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களையும், ஒவ்வொரு மாவட்டத்திற்கான கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். 2024 மே மாதத்திற்குப் பிறகு, நிதிநிலைமை சீராகும் சூழல் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்களுக்கான புதிய திட்டங்கள் தொடரும். இன்னும் பல திட்டங்கள் வர இருக்கின்றன.**

> 
>
> **கேள்வி:** கூட்டணியில் இருந்து சில கட்சிகள் வெளியேறிய நிலையில் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரையைத் தொடர்ந்ததைச் சிலர் விமர்சிக்கிறார்களே?
>
> **முதல்வர் மு.க.ஸ்டாலின் :- ராகுல் காந்தி இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தலைவராக உள்ளார். அரசியல் மட்டுமல்ல சமூகக் கருத்துகளையும் துணிச்சலாக அவர் வெளிப்படுத்தி வருகிறார். களத்தில் அவருடைய பங்களிப்பு நிறைய தேவைப்படும்.**

### எந்தத் திட்டத்திற்கும் உரிய நிதியை ஒன்றிய அரசு தருவதில்லை!

**கேள்வி:-** சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது மாநில அரசுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த அணுகுமுறை புதிய திட்டங்களைத் தீட்ட விடாமலும், இருக்கும் திட்டங்களைத் தக்க வைக்க முடியாமலும் மாநில அரசின் திறனைப் பாதிக்கிறதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி செய்யும் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களின் அடிப்படை உரிமைகளும், நிதி ஆதாரங்களும் பறிக்கப்பட்டிருக்கின்றன. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உதய் மின் திட்டம், நீட் தேர்வு நுழைவு என ஒன்றிய பா.ஜ.க. அரசின் மேலாதிக்கப் போக்கிற்கு அடிபணிந்து விட்டார்கள். இதன் காரணமாக மாநிலத்தின் நிதி நிலைமையும் கடும் பாதிப்புக்குள்ளானது. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அதனைச் சீர்ப்படுத்தி வருகிறோம்.**

**மெட்ரோ ரயில் திட்டம், வெள்ளப் பேரிடர் உள்ளிட்ட எதற்கும் ஒன்றிய அரசு உரிய நிதி ஒதுக்குவதில்லை. எனினும், தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கித் தரவும் உரிய நடவடிக்கைகளை எடுத்து, அதற்கான நிதிஆதாரங்களைத் திரட்டி, திட்டங்களைச் செயல்படுத்துவது தொடரும்.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### ராகுல்காந்தியின் “இந்திய நீதிப் பயணம்” நிறைவு!

# மும்பையில் பொதுக் கூட்டம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்!

## மும்பை வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

*மும்பை, மார்ச் 18 -*

*ராகுல் காந்தியின் ‘இந்திய நீதி பயணம்’, மும்பையில் நேற்று நிறைவடைந்தது.*

*நேற்று மாலை நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில், மல்லிகார்ஜுன கார்கே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.*

*முன்னதாக இக்கூட்டத்தில் பங்கேற்றிட வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மும்பை விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*ராகுல் காந்தி தனது 2 வது கட்ட இந்திய ஒற்றுமை நீதிப் பயணத்தை கடந்த ஜனவரி 14ம் தேதி மணிப்பூரில் தொடங்கினார். 15 மாநிலங்கள் வழியாக 6 ஆயிரத்து 700 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவர் மேற்கொண்ட பயணம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. மும்பை தாதரில் உள்ள அம்பேத்கர் நினைவிடத்தில் ராகுல் காந்தி நேற்று தனது பயணத்தை நிறைவு செய்தார். இதனையொட்டி இந்தியா கூட்டணிக் கட்சிகள் சார்பில் மும்பையில் நேற்று மாலை பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

*மேலும் சரத்பவார், உத்தவ் தாக்கரே, அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*முன்னதாக பங்கேற்பதற்காக வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மும்பை விமான நிலையத்தில் ஏராளமான தி.மு.க. மற்றும் ‘இந்தியா கூட்டணி’ கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*



இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 18-03-2024

# மிரட்டுதல் - பறித்தல் - பத்திரப்படுத்துதல்!

**பா**.ஜ.க. அமலாக்கத்துறையை எதற்காகப் பயன்படுத்தி இருக்கிறது என்பது அம்பலம் ஆகி இருக்கிறது. அமலாக்கத் துறையால் மிரட்டப்பட்ட நிறுவனங்கள்தான் பா.ஜ.க.வுக்கு அதிகப்படியான நன்கொடைகள் கொடுத்துள்ளன என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

**“இந்தியாவில் உள்ள மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களை மிரட்டி பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கவே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்காத கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எதிராக சி.பி.ஐ., அமலாக்கத் துறை போன்ற விசாரணை அமைப்புகள் ஏவப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அதன்பிறகு அந்த நிறுவனங்கள், பா.ஜ.க.வுக்கு நன்கொடை அளித்துவிட்டால் வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படுகின்றன. இந்த நிதியை வைத்துத்தான் கட்சிகளைப் பிரிக்கவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளைச் சீர்குலைக்கவும் பா.ஜ.க. அரசு பயன்படுத்தி வருகிறது. இதைவிட தேசத் துரோக நடவடிக்கை வேறு ஏதுமில்லை. பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸின் நிறுவனங்களைப் போல சி.பி.ஐ., அமலாக்கத்துறை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. பா.ஜ.க. அரசு அகற்றப்பட்டு இதுவரை நிகழ்த்தப்பட்ட தவறுகளுக்கு தண்டனை தரப்படும். இதுவரை நடைபெற்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதே என்னுடைய உத்தரவாதம் ஆகும்”** என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார்.

“அமலாக்கத்துறையால் சோதனைக்குள்ளான நிறுவனங்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுக்கு தேர்தல் நன்கொடை அளித்ததாகச் சொல்வது கற்பனை” என்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

எந்தெந்த நிறுவனங்கள் ரெய்டுக்கு உள்ளானது, அதில் எவை எல்லாம் பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கி உள்ளது என்ற தரவுகள் அனைத்தும் ஊடகங்களில் துல்லியமாக வெளியாகி வருகிறது. இதில் எதைக் கற்பனை என்கிறார் நிதி அமைச்சர்?

**‘அதிக நன்கொடை அளித்த 30 நிறுவங்களில் 14 நிறுவனங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளது’ என்று முன்னாள் அமைச்சர் ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார். ‘நன்கொடை கொடுத்த ஒரு நிறுவனத்துக்கு, அவர்கள் நன்கொடை கொடுத்த சில மாதங்களில் பல்லாயிரம் கோடிக்கான ரெண்டர் வழங்கப்பட்டது’ என்பதையும் அவர் அம்பலப்படுத்தி இருக்கிறார்.**

தொழில் நிறுவனங்கள் மீது அமலாக்கத்துறை (ஈ.டி.), வருமான வரித்துறை (ஐ.டி.), சி.பி.ஐ.யை ஏவி அந்த நிறுவனங்களிடம் இருந்து பா.ஜ.வு.க்கு தேர்தல் நிதி பெறப்பட்டதாக பிரபல ஆங்கில செய்தி இணையதளங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பே ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டுள்ளன.

2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைகளை ஆய்வு செய்து இந்தத் தரவுகளை திரட்டிய அந்த இணையதளங்கள் அதனை அம்பலப்படுத்தி உள்ளன.

**“கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.வு.க்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.வு.க்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு வாரி வழங்கி உள்ளன. 4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப் பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு நிதி தந்ததும் தெரியவந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளது”** - என்று அந்த ஆங்கில இணையத் தளங்கள் கடந்த பிப்ரவரி மாதமே விரிவாக எழுதி இருந்தன.

எனவே தேர்தல் பத்திரங்கள் மூலமாகத் தான் உண்மை வெளியானது என்பது இல்லை. ஊரறிந்த ரகசியம்தான் இது.

**“கட்சியில் இணைந்தால் சி.பி.ஐ., அமலாக்கத்துறை வழக்குகளை முடித்து வைத்து விடுகிறோம் என பா.ஜ.க. பேரம் பேசியது. அவர்களிடம் தலைகுனிய மறுத்துவிட்டேன்’’** என்று ஆம் ஆத்மி கட்சியின் டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா எப்போதோ சொல்லிவிட்டார்.

**“நீங்கள் ஏன் பா.ஜ.க.வில் சேரக் கூடாது? என்று செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத் துறை அதிகாரிகள் கேட்டனர்”** என செந்தில் பாலாஜியின் வழக்கறிஞர் கபில்சிபல் நீதிமன்றத்தில் சொன்னார். இதுதான் ஊழல் ஒழிப்பு லட்சணம் ஆகும்.

மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸில் எம்.பி., அமைச்சர் எனப் பொறுப்புகளை வகித்து, முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த சுவேந்து அதிகாரி, அஸ்ஸாம் காங்கிரஸ் கட்சியின் அமைச்சரான ஹிமந்தா பிஸ்வா சர்மா, மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் நாராயண் ரானே, மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார், சிவசேனா கட்சியின் எம்.பி. பாவனா கவாலி, சிவசேனா எம்.எல்.ஏ பிரதாப்சர்நாயக், சிவசேனா பிரமுகர் யஷ்வந்த் ஜாதவ் ஆகியோர் மீதான வழக்குகள் பா.ஜ.க.வில் சேர்ந்த பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டன. இதுதான் பா.ஜ.க.வின் ஊழல் ஒழிப்பு பாணி ஆகும்.

**நாடாளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க பா.ஜ.க.வின் முகத்திரை கிழிந்து கொண்டே இருக்கிறது.**

## கிருஷ்ணகிரி நகராட்சியில் திட்டப் பணிகள் துவக்கம்!

கிருஷ்ணகிரி, மார்ச் 18 –

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி நகராட்சி 26 வது வார்டில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணி , கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் கட்டிகான பள்ளி ஊராட்சி சிமெண்ட் மற்றும் ஜல்லி சாலைகள், உணவு தானியக்கிடங்கு , காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் மாரிசெட்டியில் அள்ளியில் ஊராட்சி மன்ற அலுவலகம், நூலக கட்டிடம், அங்கன்வாடி மையம், நாகோஜன அள்ளியில் பள்ளி கட்டிடம் , கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் காட்டி நாயனப்பள்ளி சிமெண்ட் சாலை ஆகிய பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஆத்தூர் ஒன்றியம் எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனியில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டும் பணியை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலளார் முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேஸ்வரி, ஒன்றியக்குழு உறுப்பினர் செல்வி காங்கேயன் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு முழுவதும் ஊரக வளர்ச்சி துறைமூலம்

# எட்டு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்!

### ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, மார்ச் 18-

கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப் படும் என்றும் தமிழகம் முழுவதும் ஊரக வளர்ச்சி துறை மூலம் எட்டு லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப் படும் என்றும் வீரக்கல் பிரிவு அருகே நடைபெற்ற கனவு இல்ல திட்ட விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி பேசினார்

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் முன்னிலை கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட வீரக்கல் பிரிவு மற்றும் எஸ்.பாறைப் பட்டி ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான பூமி பூஜை நடைபெற்றது. வீரக்கல் பிரிவு அருகே நடைபெற்ற விழாவிற்கு ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் தலைமை தாங்கினார்.

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், தி.மு.க. தலை மைச் செயற் குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் குமரவேல் வரவேற்றார்.

விழாவில் தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி கலந்து கொண்டு கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டும் பணியை துவக்கி வைத்த பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, இத்திட்டத்திற்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் என பெயர் வைத்ததற்கு தமிழக அரசிற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் குடிசையில்லா வீடுகளை உருவாக்க வேண்டும் என்று நினைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் நினைத்ததை இன்று செயல்படுத்தி காட்டி வருபவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

நான் ஊரக வளர்ச்சி துறை அமைச்சராக பொறுப்பேற்று ஓராண்டிற்குள் எண்ணற்ற நலத் திட்டங் கள் ஆத்தூர் தொகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிரா மங்களுக்கும் தார் சாலை, கிராமங்கள் தோறும் நியாய விலை கடைகள் அனைத்து சமுதாய மக்களுக்கும் பயன் பெறும் வகையில் சமுதாய கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கிராம மக்கள் சிரமமின்றி பொருட்களை எடுத்துச்செல்லவும் தங்கள் வீட்டு இல்ல விழாக்களை குறைந்த செலவில் நடத்த முடியும் என்ற சூழ்நிலை உருவாகி உள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைவர் கலைஞர் வழியில் ஜாதி, மத, இன பேதமின்றி அனைவருக்கும் அனைத்து நலத்திட்டங்களும் கிடைக்கும் படி சிறப்பான திட்டங் களை தமிழகம் முழுவதும் செயல் படுத்தி வருகிறார். அவர் வழங்கிய மகளிர் உரிமைத்தொகை கிராமங்களில் உள்ள மகளிருக்கு வர பிரசாதமாக அமைந்துள்ளது என்றார்.

நிகழ்ச்சி யில் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் குணவதி, தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கை சாமி, வீரக்கல் செல்வி காங்கேயன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜேந்திரன், எம். சி.பாண்டியயன், பொருளாளர் ஜாதிகவுண்டன்பட்டி கருப்பையா, மேற்கு ஒன்றிய துணை செயலாளர் கலாபச்சை, மல்லையாபுரம் சக்திவேல், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் எஸ். பாறைப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்னிலைக்கோட்டை அந்தோணியம்மாள் அலெக்ஸ், எஸ்.பாறைப்பட்டி பாலாஜி, வீரக்கல் ஊராட்சி மன்றத் தலைவர் பிள்ளையார்நத்தம் உலகநாதன், ராஜேஸ்வரி தங்கவேல், ஆத்தூர் ஜம்ருத் பேகம், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அக்கரைப் பட்டி லட்சுமி சக்திவேல், தி.மு.க. மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைபட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய பொறியாளர் முருக பாண்டி, ராமநாதன், ஊராட்சி மன்ற துணை தலைவர்; வீரக்கல் யூஜின், அரசு ஒப்பந்தகாரர்கள் செந்தில்குமார், விக்னேஷ், ஜீசஸ் அகஸ்டின் மெல்வின், திமுக நிர்வாகிகள் டாஸ்மாக் வடிவேலு, ஒன்றிய பிரதிநிதிகள் வடக்கு தெரு சந்திரன், தங்கபாண்டி, உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சீர்மரபினருக்கு டி.என்.டி. ஒற்றைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட

# ஒப்பற்ற தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### தமிழ்நாடு அரசு சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி அறிக்கை!

சென்னை, மார்ச் 18-

சீர்மரபினருக்கு DNT ஒற்றை சான்றிதழ் வழங்கி ஆணை பிறப்பித்த ஒப்பாருமிக்காருமில்லா முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி என சீர்மரபினர் நல வாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி தெரிவித்துள்ளார்.

அவரது நன்றி அறிக்கை வருமாறு:-

சீர்மரபினர் இன மக்களுக்கு ஒரே மாதிரியான சான்றிதழ் வழங்குவதற்கு உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities மற்றும் Denotified Tribes என இரண்டு சான்றிதழ்கள் வழங்குவதால் குழப்பமான சூழ்நிலை இருந்தது. இதனை அகற்றுவதற்கான முயற்சியை எடுப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். ‘சொன்னதைச் செய்வோம்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்கள், அந்த இரட்டை சான்றிதழ் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப்பரம்பரை சட்டத்தினால் (Criminal Tribes Act) பாதிக்கப்பட்ட வகுப்பினர்கள், சீர்மரபினர் வகுப்பு என வகைப்படுத்தப்பட்டார்கள். இம்மக்களின் கல்வி, வேலை வாய்ப்புக்கான பல்வேறு வழிமுறைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தினார்கள்.

1969 ஆம் ஆண்டு முதல் முதலில் முதல்வர் ஆன கலைஞர் அவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை உருவாக்கினார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார்கள். அந்தப் பரிந்துரைப்படி சமூகநீதியை அமல்படுத்தினார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலை வாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருடன் சேர்த்து 20 விழுக்காடு இடஒதுக்கீடு இம்மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 68 வகுப்பினர்கள் சீர்மரபினர் என வகைப்படுத்தப் பட்டுள்ளன.



முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் 2008 முதல் சீர்மரபினர் வகுப்பினர் என சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் 2019 ஆம் ஆண்டில் அன்றைய அரசால் மாறுபாடான அறிவிப்பு செய்யப்பட்டது. மாநில அரசின் உதவிகள் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNC) என அழைக்கப்படுவர் எனவும், ஒன்றிய அரசின் நலத்திட்ட பயன்களைப் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNT) என அழைக்கப்படுவர் என ஆணை வெளியிடப்பட்டது. இது குழப்பத்தை ஏற்படுத்தியது.

மேற்கண்ட அரசாணைகளின்படி இரண்டு சான்றிதழ்கள் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities / Denotified Tribes என இரண்டு சான்றிதழ்களுக்குப் பதிலாக ஒரே சான்றிதழ் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இனி வருவாய் அலுவலர்கள் சீர்மரபின வகுப்பினர்களுக்கு ஒரே சான்றிதழ் வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒற்றைக் கையெழுத்தில் உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டுமல்ல திராவிடப் பேரினத்தின் தலைவராகச் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் பொற்கால ஆட்சி தொய்வில்லாமல் தொடரட்டும் என வாழ்த்துகிறோம்.

இவ்வாறு இராசா அருண்மொழி நன்றி தெரிவித்துள்ளார்.



மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியை இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் சு.வெங்கடேசன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற போது எடுத்த படம். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மற்றும் கழகத்தினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

# கோடிக்கணக்கில் நிதி பெற்றதன் மூலம் உண்மையான ஊழல் கட்சி பா.ஜ.க.என்பது உறுதியாகிவிட்டது!

## ‘DT Next’ - ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி:-** நிதிக் கட்டுப்பாடுகளை விதித்து எதிர்க்கட்சிகள் தங்கள் மாநிலங்களில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற விடாமல் ஒன்றிய அரசு தடுக்கிறதா? இத்தகைய கட்டுப்பாடுகள், நிதியை விடுவிப்பதில் தாமதம் ஆகியவை பா.ஜ.க.வை எதிர்க்கும் மாநிலங்கள் மீது அழுத்தம் கொடுப்பதற்காகவே செய்யப்படுவதாக நினைக்கிறீர்களா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- மாநில உரிமைகளைப் பறிக்கும் பா.ஜ.க.வின் முதன்மை இலக்கு, இந்தியாவில் மாநில அரசுகளே இருக்கக்கூடாது என்பதுதான். பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களை இரட்டை இஞ்சின் அரசு என்று அவர்கள் வர்ணிப்பதன் மூலமே, பா.ஜ.க. ஆட்சியில்லாத மாநில மக்களின் நலன்களைப் புறக்கணிப்பதைப் புரிந்துகொள்ளலாம். அதிலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஒருபோதும் ஆட்சி அமைக்க முடியாது என்பதால் முற்றிலுமாகப் புறக்கணிக்கும் போக்கு தொடர்கிறது. இதன் மூலமாக, மக்களுக்கு மாநில அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சூழலை உருவாக்கி, தேர்தல் களத்தில் விமர்சனம் செய்யலாம் என்பது பா.ஜ.க.வின் கணக்கு. ஆனால், அது தப்புக் கணக்காகத்தான் முடியும். பா.ஜ.க.வுக்கு எந்தக் காலத்திலும் தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். பா.ஜ.க,வுக்கு அளிக்கும் வாக்கு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வைக்கும் வேட்டு என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.**

**கேள்வி:** பிரதமர் மோடியானாலும் பா.ஜ.க ஆனாலும் ஒன்றிய அரசின் எந்த வளர்ச்சித் திட்டத்தை உங்கள் அரசு தடுத்து நிறுத்தியது என விளக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு இதுவரை பதில் கூறவில்லை. அதேநேரம், தி.மு.க.வை வாரிசு கட்சி என்றும் ஊழல் கட்சி என்றும் பிரதமர் மீண்டும் விமர்சித்திருக்கிறாரே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: - பொதுவாக, மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் நம்மை விமர்சனம் செய்யும்போது ஒரு சில பொய்களை, தவறான தகவல்களை வெளியிடுவது உண்டு. ஆனால், பிரதமர் போன்ற மிக உயர்ந்த பொறுப்பில் இருப்பவர்கள் அப்படிச் செயல்படமாட்டார்கள். பண்டிதர் நேரு முதல் டாக்டர் மன்மோகன் சிங் வரை பிரதமர்கள் அப்படித்தான் இருந்தார்கள். ஆனால், திரு. நரேந்திர மோடியும் அவரது பா.ஜ.க. நிர்வாகிகளும் தவறான தகவல்களைச் சொல்பவர்களாகவும், வதந்திகளை வாட்ஸ்ஆப் வழியாகப் பரப்புகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இதையே முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக்கிற பா.ஜ.க. நிர்வாகிகளும் உண்டு. அவை குறித்து, கேள்வி எழுப்பினால் பதில் இருக்காது. இன்னொரு வதந்திக்கோ, விமர்சனத்திற்கோ தாவி விடுவார்கள்.**

### தி.மு.க. மீது திசை திருப்பும் விமர்சனம் செய்கிறார் மோடி!

**ஒன்றிய அரசின் எந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு முடக்கியது என்று கேட்டால் அதற்குப் பதில் வராது. காரணம், ஒன்றிய அரசின் பங்களிப்போடு நடைபெறும் பிரதமரின் வீடு கட்டும் திட்டம், ஜல்ஜீவன் திட்டம் உள்ளிட்ட அனைத்திலும் தமிழ்நாடு அரசு தன் பங்களிப்பைக் கூடுதலாகச் செலுத்தி, சிறப்பாக நிறைவேற்றி அதற்காக ஒன்றிய அரசின் சார்பிலேயே விருதுகளையும் பெற்றுள்ளது. இது பிரதமர் தொடங்கி பா.ஜ.க. நிர்வாகிகள் அனைவருக்கும் தெரியும். அதனால்தான் தி.மு.க. மீது வாரிசு அரசியல், ஊழல் முறைகேடு என்று திசைதிருப்பும் விமர்சனங்களை வைப்பது வழக்கமாகிவிட்டது.**

**நான் கலைஞரின் மகன்தான். அவருடைய கொள்கை வாரிசுதான். அந்த அடிப்படையில்தான் மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். பா.ஜ.க. வெளியிட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாரிசுகளுக்கு பிரதமரும் அவரது கட்சி நிர்வாகிகளும் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?**

**7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு எனத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கையும், தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ள நிதியும் பா.ஜ.க.வின் உண்மை முகம் என்ன என்பதைக் காட்டியிருக்கிறதே அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஊழலை சட்டபூர்வமாகச் செய்வதே பா.ஜ.க.வின் பாணியாகும்.**

**கேள்வி :** முன்னாள் அமைச்சர்கள் செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி ஆகியோருக்கு எதிரான வழக்குகளும், அமைச்சர் இ. பெரியசாமிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பும் தி.மு.க.வின் பிம்பத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : - இவை அரசியல் உள்நோக்கம் கொண்டவை. அமைச்சர் பொன்முடி மீதான தண்டனைக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. அமலாக்கத்துறை எதிர்க்கட்சிகளைப் பணியவைக்கும் துறையாக பா.ஜ.க. ஆட்சியில் மாறிவிட்டதை தேர்தல் பத்திர ஊழல் வெளிக்கொண்டு வந்துவிட்டதே. இதில் இருந்தே அமைச்சர் செந்தில் பாலாஜி அரசியல்ரீதியாகக் குறி வைக்கப்படுவதைப் புரிந்துகொள்ளலாம். தி.மு.க. அரசுக்கு மக்களிடம் உள்ள நற்பெயருக்கும் செல்வாக்குக்கும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற முயற்சிகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதனைச் சட்டரீதியாக எதிர்கொள்வோம்.**

**7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு எனத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கையும், தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ள நிதியும் பா.ஜ.க.வின் உண்மை முகம் என்ன என்பதைக் காட்டியிருக்கிறதே அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஊழலை சட்டபூர்வமாகச் செய்வதே பா.ஜ.க.வின் பாணியாகும்.**

### ஜெயலலிதா ஆட்சியை ஊழல் ஆட்சி என்றார் மோடி!

**கேள்வி :** எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சியை மோடி புகழ்ந்து பேசி இருக்கிறார்? இதன் அரசியல் உள்நோக்கம் என்னவாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சியை ஊழல் ஆட்சி என்று இதே மோடியும் அமித்ஷாவும் விமர்சித்திருக்கிறார்கள். இப்போது எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் போற்றுகிறார்கள். தமிழ்நாட்டில் தங்களுடைய சாதனை என்று பா.ஜ.க.வால் எதையும் சொல்ல முடியாது. தி.மு.க ஆட்சியின் சாதனைகள் மீதோ, பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அரசியல் கொள்கைகள் மீதோ பா.ஜ.க.வால் ஸ்டிக்கர் ஒட்ட முடியாது. அதனால் எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் பயன்படுத்துகிறார்கள்.**

**கேள்வி :** போதைப் பொருள் வழக்கில் கைதான தி.மு.க.வின் முன்னாள் நிர்வாகி ஜாபர் சாதிக்கை முன்வைத்து பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் தி.மு.க.வை விமர்சித்து வருகின்றனர். முதலமைச்சராக இவ்விவகாரம் குறித்து நீங்கள் பதில் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி வலியுறுத்தியிருக்கிறார். உங்கள் ஆட்சியில் போதைப்பொருள் புழக்கம் இருப்பதாகக் கூறி மனிதச் சங்கிலிப் போராட்டமும் நடத்தியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- குட்கா ஊழலில் தனது அமைச்சர் மீதும், காவல் துறை தலைவர் மீதும் நேரடியாக குற்றம் சாட்டப்படும் அளவில் ஆட்சி நடத்தியவர்தான் பழனிசாமி. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் புழக்கமும் அவரது ஆட்சியில்தான் அதிகமாகின. அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலேயே கஞ்சா -ஹெராயின் வழக்குகள் போடப்பட்டதையும், அவை எப்படிப்பட்டவை என்பதையும் நாடறியும். அதனால், எடப்பாடி பழனிசாமியின் கட்சியினர் நடத்திய மனிதச்சங்கிலி போராட்டம் என்பது தேர்தல் நேர ஸ்டண்ட்.**

### அ.தி.மு.க. - பா.ஜ.க.வும்தான் போதைப் பொருளுக்கு வித்திட்ட கட்சிகள்!

**பா.ஜ.க. ஆட்சி செய்யும் குஜராத்தான் போதை மருந்துகளின் தலைநகரமாக உள்ளது என்பதைப் பல புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அண்மையில், பழனிசாமியும் அதே குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார். ஆக, இந்த இரண்டு கட்சிகளும்தான் போதைப் பொருள்களுக்கு வித்திட்ட கட்சிகள். ஜாபர் சாதிக் விவகாரத்தில் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தி.மு.க. மீதுஅவதூறு பரப்பினால் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும்.**

**கேள்வி:** அண்மைக்காலமாக அடிக்கடி பிரதமர் மோடி தமிழ்நாட்டின் பக்கம் தலைகாட்டுகிறார். கடந்த பத்தாண்டுகளில் அவர் இத்தனை குறுகிய இடைவெளிகளில் தமிழ்நாட்டுக்கு வந்ததே இல்லை. 2014, 2019 தேர்தல் காலத்தில் கூட இதே நிலைதான். தற்போது அவர் அடிக்கடி வரக் காரணம் இங்கு பா.ஜ.க.வுக்கு வாய்ப்புள்ளது என நினைப்பதாலா அல்லது வடக்கில் அவர்கள் வலிமையாக உள்ள மாநிலங்களில் இம்முறை வெற்றி சந்தேகம் என நினைப்பதாலா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- இந்தியா முழுவதும் மோடி தலைமையிலான அரசின் பத்தாண்டுகால ஆட்சியின் அவலங்களும் அதனால் அதிருப்திகளும் வெளிப்பட்டு வருகின்றன. அது தேர்தல் களத்தில் நிச்சயம் எதிரொலிக்கும். தமிழ்நாடும் தென்மாநிலங்களும் அதைக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே எதிரொலித்தன. தமிழ்நாட்டிற்கு என்னென்ன நன்மைகள் செய்தார் என்று மக்களிடம் உண்மையைச் சொல்ல முடியுமா? அவர் வருகிற ஒவ்வொரு முறையும் அவரே தனது ஆட்சியின் அவலங்களை நினைவுபடுத்திவிட்டுச் செல்வார்.**

### தமிழ்நாட்டில் தாமரை மலருமா? கவிழுமா? என்பது தேர்தல் முடிவு காட்டும்!

**கேள்வி:** 2021-இல் இருந்து தமிழ்நாட்டில் பா.ஜ.க. பெரிதும் வளர்ந்துள்ளதாக அவர்கள் கூறிக்கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணிதான் முழுவெற்றி பெறும் என்று அறிவிக்கும் சில கருத்துக்கணிப்புகளும் பா.ஜ.க தலைமையிலான கூட்டணி 20% வரை வாக்குகளைப் பெறும் என்கின்றன. அப்படியானால் தமிழ்நாட்டில் தாமரை நிலைபெற்றுவிட்டதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : - மாயபிம்பத்தைக் கட்டமைக்க நினைக்கிறார்கள். (தாமரை) மலருமா கவிழுமா என்ற உண்மையைத் தேர்தல் முடிவுகள் காட்டிவிடும்.**

**கேள்வி:** 2019-இல் பா.ஜ.க. வெற்றி பெற்ற இந்தி பேசும் மாநிலங்களில் ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது? நிதிஷ் குமார், ஜெயந்த் சவுதரி ஆகியோர் வேறு இந்தியா கூட்டணியை விட்டு வெளியேறிவிட்டார்களே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: - 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இதேபோல ‘இந்தியா ஒளிர்கிறது’ என்று ஆளும் பா.ஜ.க. தன் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. கருத்துக் கணிப்புகளும் அதனையொட்டியே இருந்தன. குறிப்பாக, வட மாநிலங்களில் பா.ஜ.க. ஆதரவு அலை என்று தெரிவித்தன. எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமையில்லை என விமர்சிக்கப்பட்டது. ஆனால், தேர்தல் முடிவுகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கே சாதகமாக அமைந்தன. அடுத்த பத்தாண்டுகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிதான் நடைபெற்றது. 2004 போலத்தான் 2024 தேர்தல் முடிவுகளும் அமையும். வரலாறு திரும்பும்.**

### ‘இந்தியா’ கூட்டணியை தகர்த்துவிடலாம் என்ற பா.ஜ.க.வின் எண்ணம் நிறைவேறாது!

**கேள்வி:** உ.பி., மகாராஷ்டிரா, டெல்லி, குஜராத், மத்திய பிரதேசம், ஹரியானா, கோவா ஆகிய வட மாநிலங்களில் ‘இந்தியா’ கூட்டணி தொகுதிப் பங்கீட்டை நிறைவுசெய்திருப்பது நம்பிக்கை அளிக்கிறது. ஆனால், மத அரசியல் தாக்கம் செலுத்தும் பா.ஜ.க. வலிமையாக உள்ள மாநிலங்களில் அவர்களை எதிர்க்கப் போதுமான நடவடிக்கைகளை ‘இந்தியா’ கூட்டணி மேற்கொண்டுள்ளதா? குறிப்பாக ராமர் கோயில் திறப்புக்குப் பிறகு...

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ‘இந்தியா’ கூட்டணியை முற்றிலுமாகத் தகர்த்துவிடலாம் என்ற பா.ஜ.க.வின் எண்ணம் நிறைவேறவில்லை என்பதைத்தான் தங்களின் கேள்வி வெளிப்படுத்துகிறது. மதவாத அரசியல் என்பது பா.ஜ.க.வின் அடிப்படைக் கொள்கை. மக்களின் பக்தியுணர்வை வாக்குகளாக மாற்ற நினைப்பது அதன் தேர்தல் உத்தியாக இருக்கலாம்.**

**மதச்சார்பின்மை - பன்முகத்தன்மை - மாநில உரிமைகளை எந்தளவு பா.ஜ.க. சிதைத்துள்ளது என்பதும் மக்களுக்குத் தெரியும். அதை உரிய வகையில் தேர்தல் களத்தில் எடுத்துரைக்கும் பணியை இந்தியா கூட்டணி உறுதியாகவும் தெளிவாகவும் மேற்கொள்ளும்.**

**கேள்வி:** மேற்கு வங்கத்தில் 42 தொகுதிகளுக்கும் மமதா பேனர்ஜி வேட்பாளர்களை அறிவித்துள்ளார். ஐக்கிய ஜனதா தளம், ராஷ்டிரிய லோக் தளத்துடன் மற்றுமொரு கட்சியை ‘இந்தியா கூட்டணி’ இழந்துவிட்டதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ஒவ்வொரு மாநிலத்திலும் எந்தெந்தக் கட்சிகளுக்கு செல்வாக்கு இருக்கிறதோ அதற்கேற்பத் தொகுதிப் பங்கீடு இருக்க வேண்டும் என்பதும், அந்தந்த மாநிலங்களிலும் பெறுகின்ற முழுமையான வெற்றியின் மூலம் ஒன்றிய அரசில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இந்தியா கூட்டணியின் முதல் கூட்டத்திலேயே வலியுறுத்தியிருக்கிறேன். ஒரு சில கட்சிகள் தங்களின் மாநில அரசியல் சார்ந்த கண்ணோட்டத்தில் செயல்படுவதைத் தவிர்க்க முடியாது. பா.ஜ.க. மீது மக்களுக்குள்ள கோபத்தை வாக்குகளாக மாற்றும் சக்தி பெற்ற அரசியல் கட்சிகளே தற்போதைய தேர்தல் களத்தில் முதன்மையாக இருப்பதைப் பல மாநிலங்களிலும் காண முடிகிறது.**

### சட்டமன்ற - நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் தீர்ப்பு அவ்வப்போது மாறும்!

**கேள்வி:** 5 மாநிலத் தேர்தல் தோல்விகளில் இருந்து (தெலங்கானா வெற்றி தவிர்த்து), இந்தி மாநிலங்களில் பா.ஜ.க.வை சமாளிக்கும் அளவுக்கு காங்கிரஸ் கட்சி மீண்டுவிட்டதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ஒரு சில மாதங்களுக்கிடையே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இடையில் மக்களின் தீர்ப்புகள் மாறுபட்டிருப்பதைப் பல தேர்தல்களில் பார்த்திருக்கிறோம். இனியும் பார்க்கலாம்.**

**கேள்வி:** கூட்டணியில் இருந்து சில கட்சிகள் வெளியேறிய நிலையில் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரையைத் தொடர்ந்ததைச் சிலர் விமர்சிக்கிறார்களே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ராகுல் காந்தி இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தலைவராக உள்ளார். அரசியல் மட்டுமல்ல சமூகக் கருத்துகளையும் துணிச்சலாக அவர் வெளிப்படுத்தி வருகிறார். களத்தில் அவருடைய பங்களிப்பு நிறைய தேவைப்படும்.**

### ‘இந்தியா’ கூட்டணி தனது பணியைத் தொடங்கி விட்டது!

**கேள்வி:** தேர்தலுக்கு மிக நெருக்கத்தில்தான் இந்தியா கூட்டணி வேலையைத் தொடங்கியிருக்கிறதா? வாக்குகளைக் கவரப் போதிய அவகாசம் இருக்கிறதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: - இந்தியா கூட்டணி என்பது தன்னுடைய வேலைத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டது. அவற்றை ஒருங்கிணைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தேர்தல் பரப்புரைகளின் போது உங்களின் கேள்விக்கான விடையை நேரில் காண்பீர்கள்.**

**கேள்வி:** வி.சி.க.வுடன் நீங்கள் தொகுதிப் பங்கீட்டை முடித்த மறுநாள் அதன் துணைப் பொதுச்செயலாளர் மீது ரெய்டு நடக்கிறது. சிவசேனா, ஆர்.ஜே.டி, சமாஜ்வாதி கட்சித் தலைவர்களுக்கும் இது நடந்தது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சொத்துகள் அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டன. இவை ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்கிறார் பிரதமர். இது வாக்காளர்களிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? இது ஒரு தேர்தல் பிரச்சினையாக மாறுமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: - பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் மற்றும் பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகள் இவற்றைக் குறிவைத்தே அமலாக்கத்துறை, சி.பி.ஐ, வருமானவரித்துறை ரெய்டுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை எல்லாரும் அறிவார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் பா.ஜ.க.வுக்குத் தாவி விட்டால், அவர்கள் மீதான ஊழல் கறையைச் சலவை செய்து தூய்மைப்படுத்தும் வாஷிங் மெஷினாக பா.ஜ.க. செயல்பட்டு, அவர்களுக்குக் கட்சியிலும் ஆட்சியிலும் பதவியும் வழங்கி வருகிறது.**

### அரசியல் கட்சிகளை மிரட்ட அமலாக்கத்துறையைப் பயன்படுத்தும் மோடி!

**மற்ற கட்சிகளையெல்லாம் ஊழல்வாதிகள் என்றும், தாங்கள் மட்டுமே யோக்கிய சிகாமணிகள் என்றும் சொல்லி வந்த பா.ஜ.க.வின் முகத்திரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அம்பலமாகியிருக்கிறது. அமலாக்கத் துறையால் நடவடிக்கைக்குள்ளான நிறுவனங்கள் பல அடுத்த சில நாட்களில் பா.ஜ.க.வுக்கு பெருமளவில் நிதியளித்திருப்பது வெளிப்பட்டுள்ளது. இதிலிருந்தே அரசியல் கட்சிகளையும் நிறுவனங்களையும் மிரட்டுவதற்காகவே அமலாக்கத்துறை என்கிற அமைப்பை மோடி அரசு பயன்படுத்தியிருப்பதும், அதன் மூலமாக நூற்றுக்கணக்கான கோடிகளை நிதியாகப் பெற்றிருப்பதும் உறுதியாகிவிட்டது. உண்மையான ஊழல் கட்சி பா.ஜ.க.தான் என்பதை மக்கள் நன்றாகவே புரிந்து கொண்டார்கள்.**

### தோழமைக் கட்சிகளுக்கு மதிப்பளித்து தொகுதிப் பங்கீடு!

**கேள்வி:** கூட்டணிக் கட்சிகளுடன் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகத் தொகுதிப் பங்கீட்டை முடித்துவிட்டீர்கள். 2019-ஐ விட இம்முறை குறைந்த தொகுதிகளில்தான் தி.மு.க போட்டியிடுகிறது. கூட்டணிக் கட்சியினரை அனுசரித்துப் போக வேண்டுமென தி.மு.க. சமரசம் செய்து கொண்டதா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- இது தேர்தல் கூட்டணி அல்ல. கொள்கைக் கூட்டணி என்பதை 2019, 2021 தேர்தல்களில் நிரூபித்தோம். அதே கூட்டணி இப்போதும்**

## மக்களுக்கான பல புதிய திட்டங்களை மேலும் நிறைவேற்றித் தருவோம்!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# தமிழ்நாட்டுக்குச் செய்த சாதனைகளை மோடியால் பட்டியலிட்டுக் காட்ட முடியுமா?

## ‘DT Next’ - ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

**தொடர்கிறது. தோழமைக் கட்சிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தொகுதிப் பங்கீடும் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பதும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது ஓர் ஆரோக்கியமான கூட்டணியின் தொடர் செயல்பாடு. புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் முழுமையான வெற்றி என்பதுதான் எங்கள் இலக்கு.**

**கேள்வி:** வடக்கில் காங்கிரஸ் பெற்ற தோல்விகளைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சிக்கான தொகுதிகளை இம்முறை குறைப்பீர்கள் எனக் கூறப்பட்ட நிலையில், அதே பத்து தொகுதிகளை ஒதுக்கியிருக்கிறீர்களே? ஏன்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : யூகங்களாகப் பல செய்திகள் வெளியாகியிருக்கலாம். ஒரு சில தேர்தல் தோல்விகள் அடிப்படையில் எல்லா அம்சங்களையும் புறக்கணித்துவிட முடியாது. பா.ஜ.க.வுக்கு எதிராக நிற்கக்கூடிய தேசிய அளவிலான கட்சி காங்கிரஸ். அதற்குரிய இடத்தை வழங்கியிருக்கிறோம்.**

### களநிலவரத்தை தி.மு.க. உணர்ந்தே தொகுதிப் பங்கீடு!

**கேள்வி:** தொகுதிப் பங்கீட்டில் தி.மு.க. மிகவும் தாராளமாக நடந்துகொண்டதாகக் கூறப்படுகிறதே? மேலும் கடினமான தொகுதிகள் தானே நேரடியாகக் களமிறங்குவதாகவும் தெரிகிறது. இது என்ன உத்தி?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: தி.மு.க.வைத் தோழமைக் கட்சியினர் நம்புகிறார்கள். தோழமைக் கட்சிகளை தி.மு.க. மதிக்கிறது. கள நிலவரத்தையும் தி.மு.க. உணர்ந்திருக்கிறது. இதன் வெளிப்பாடுதான் தற்போதைய தொகுதிப் பங்கீடு.**

**கேள்வி:** அதேநேரம், விடுதலைச் சிறுத்தைகளுக்குப் பொதுத் தொகுதி ஒதுக்காததால் விமர்சனமும் எழுந்துள்ளதே? அதில் என்ன சிக்கல்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : சட்டமன்றத் தேர்தலில் இரண்டு பொதுத் தொகுதிகளில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் போட்டியிட்டு வெற்றி பெற்று, உறுப்பினர்களாக உள்ளனர். தற்போதைய தேர்தல் களத்தையும் சூழலையும் பற்றி முழுமையாகக் கலந்தாலோசித்துத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டன. அது குறித்து, சகோதரர் திருமாவளவன் அவர்களே தெளிவாக விளக்கிவிட்டார்.**

### இளையவர்கள் - மூத்தவர்கள் - பெண்கள் என அனைவரையும் உள்ளடக்கிய வேட்பாளர் பட்டியல் வரும்!

**கேள்வி:** தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி சேலம் மாநாட்டில், வரும் தேர்தலில் இளைஞரணியினருக்கு அதிக வாய்ப்பளிக்க வேண்டும் என வெளிப்படையாகக் கோரிக்கை வைத்துள்ளாரே? அது நடக்குமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : மூத்தவர்கள் - இளையவர்கள் - பெண்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியே வேட்பாளர் பட்டியல் இருக்கும்.**

**கேள்வி:** தேர்தல் ஆணையர் அருண் கோயலின் திடீர் பதவி விலகல் பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. தேர்தல் ஆணையத்தில் அரசியல் அழுத்தமும் கருத்து வேறுபாடுகளும் நிலவுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தன்மை கேள்விக்குள்ளாகியுள்ளது பற்றி?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய எந்தவொரு அமைப்பையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தன் கைப்பாவையாக மாற்றுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைக் கடந்த 10 ஆண்டுகளில் பார்த்துவிட்டோம். தேர்தல் ஆணையத்தின் மீதான பா.ஜ.க அரசின் ஆதிக்கமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஜனநாயகத்தைக் காக்கின்ற போராட்டத்தில் இதனையும் கவனத்தில் கொண்டே செயல்படுகிறோம்.**

### பா.ஜ.க. அரசு உச்சநீதி மன்றத்தையே ஏமாற்ற நினைத்தது அம்பலமாகிவிட்டது!

**கேள்வி:** தேர்தல் பத்திர வழக்கில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு நம்பிக்கையளிக்கிறது. ஆனால் இதில் தேர்தல் ஆணையம் மற்றும் எஸ்.பி.ஐ தெரிவித்த பதில் அந்த அமைப்புகளின் சுதந்திரத்தன்மை மற்றும் நேர்மையை சந்தேகத்துக்குள்ளாக்கியுள்ளதே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : இந்திய மக்களின் கடைசி நம்பிக்கையாக உச்சநீதி மன்றம் உள்ளது. அதன் உத்தரவுகளையே புறக்கணிக்க நினைப்பதும், காலம் தாழ்த்த நினைப்பதும் அரசமைப்புக்கு எதிரான செயல். ஸ்விஸ் வங்கியில் பதுக்கப்பட்டுள்ள இந்தியாவின் கறுப்புப்பணத்தை மீட்டு, ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்ச ரூபாய் போடுவேன் என்று சொன்ன மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, அதில் ஒரு நயா பைசா வைக்கூட மீட்காமல், ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி, பல்லாயிரம் கோடிகளைப் பல நிறுவனங்களிடமிருந்து நிதியாகப் பெற்று, நீதிமன்றத்தையே ஏமாற்ற நினைத்தது அம்பலமாகியுள்ளது.**

**கேள்வி:** தி.மு.க.வும் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி பெற்றுள்ளது எனக் கூறி பா.ஜ.க. விமர்சனத்தில் இருந்து நழுவுகிறதே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : தி.மு.க என்பது தனது முதல் தேர்தல் களத்திலிருந்தே தேர்தல் நிதி திரட்டுகிற இயக்கம்தான். 1967 தேர்தலில் 10 லட்சம் என்கிற தேர்தல் நிதி இலக்கு நிர்ணயித்தார் பேரறிஞர் அண்ணா. 11 லட்சமாகத் நிதி திரட்டித் தந்தார் கலைஞர். நாங்கள் நிதி திரட்டுவது என்பதும் அது குறித்த கணக்குகளை முறையாகத் தணிக்கை செய்வதும் வழக்கம்தான். இப்போதும் அதே வெளிப்படைத் தன்மையுடன்தான் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டியிருக்கிறோம். ஆனால், தி.மு.க உள்ளிட்ட கட்சிகளின் செயல்பாடுகளைக் குறையாக குற்றமாகச் சொல்லிக் கொண்டிருந்த பா.ஜ.க.வின் யோக்கியத் தன்மை என்ன என்பதும், அது யார் - யாரிடம் எதற்காக - எத்தகைய நெருக்கடி கொடுத்து தேர்தல் நிதியைப் பெற்றுள்ளது என்பதும் கவனத்திற்குரியது. கையும் களவுமாக சிக்கியுள்ளது பா.ஜ.க.**

### பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்பு சட்டத்தையே தூக்கி எறிந்து விடுவார்கள்!

**கேள்வி:** கர்நாடக பா.ஜ.க. எம்.பி ஒருவர் அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என வெளிப்படையாகப் பேசியிருக்கிறாரே? அக்கட்சியினர் இப்படி பேசுவது இது முதல் முறையும் அல்ல. இது அரசியலமைப்புக்கு ஆபத்து என நினைக்கிறீர்களா?

**தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய எந்தவொரு அமைப்பையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தன் கைப்பாவையாக மாற்றுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைக் கடந்த 10 ஆண்டுகளில் பார்த்துவிட்டோம். தேர்தல் ஆணையத்தின் மீதான பா.ஜ.க அரசின் ஆதிக்கமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஜனநாயகத்தைக் காக்கின்ற போராட்டத்தில் இதனையும் கவனத்தில் கொண்டே செயல்படுகிறோம்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்பு சட்டத்தையே தூக்கி எறிந்து விடுவார்கள். இதைத்தான் வெளிப்படையாக அவர் சொல்லி இருக்கிறார். பா.ஜ.க தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்கு இதைவிட வேறு காரணம் தேவையில்லை.**

### பா.ஜ.க.வின் பொய்முகம் தேர்தல் களத்தில் எதிரொலிக்கும்!

**கேள்வி:** எதிர்வரும் தேர்தல் கொள்கைசார்ந்த மோதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாக்காளர்களிடம் கவனம் பெறும் விஷயங்களாக எவை இருக்கும்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : பா.ஜ.க.வின் பொய் வாக்குறுதிகள், துரோகங்கள், மக்களைப் பிளவுபடுத்தும் சதிகள், மாநில உரிமைகளுக்கான ஆபத்து இவற்றுக்குள் நீங்கள் சொன்ன அனைத்தும் அடங்கும். அவையே தேர்தல் களத்தில் நாடெங்கும் எதிரொலிக்கும்.**

**கேள்வி:** 5 ஆண்டுகள் கழித்து சி.ஏ.ஏ நடைமுறைப்படுத்துவதற்கான விதிமுறைகளை பா.ஜ.க அரசு அறிவித்துள்ளது. இது திசைதிருப்பும் உத்தி என்கிறார்கள் சிலர். வாக்காளர்களை மதரீதியாகப் பிரிவினை செய்யும் செயல் என்கிறார்கள் சிலர்? சி.ஏ.ஏ. பா.ஜ.க.வின் இரகசிய ஆயுதமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : மதரீதியாக - மொழிரீதியாக - சாதிரீதியாக மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலைத்தான் பா.ஜ.க. தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஓர் அங்கம்தான் சி.ஏ.ஏ. தற்போது சிறுபான்மை யினருக்கு எதிரான நடவடிக்கையாக மட்டுமே இது தெரிந்தாலும், எதிர்காலத்தில் ஒவ்வொரு மாநிலத்தில் வாழும் வெவ்வேறு மொழி பேசும் மக்களை நோக்கியும் புதிய சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வரும். அதற்கு சி.ஏ.ஏ. ஒரு முன்னோட்டம்.**

### சி.ஏ.ஏ.வை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்பது உறுதி!

**கேள்வி:** கேரளம், மேற்கு வங்க முதலமைச்சர்களைத் தொடர்ந்து நீங்களும் சி.ஏ.ஏ. தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படாது எனக் கூறியிருக்கிறீர்கள்? அது சாத்தியமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் : ஒன்றிய அரசு கொண்டு வரும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாநில அரசுகளிடம்தான் உள்ளது. இந்தி மொழி தொடர்பான ஒன்றிய அரசின் சட்டத்திற்கு எதிராகத்தான் பேரறிஞர் அண்ணா இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். இடஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோல் என்கிற ஒன்றிய அரசின் நடைமுறையை மாநில அரசு ஏற்கவில்லை. அது போலத்தான் சி.ஏ.ஏ.விலும் எங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். இதற்குரிய அரசியல்சட்ட உரிமைக்கான வழியையும் நீதிமன்றத்தின் மூலம் நிலை நாட்டுவோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் DT Next ஆங்கில இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## “நீங்கள் நலமா?” திட்டம் :

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பயனாளிகளுடன் கலந்துரையாடல்!

## காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு கருத்துகளைக் கேட்டறிந்தார்!

**சென்னை, மார்ச் 18-**

**முதல்வரின் முகவரி துறையின் கீழ் பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமை திட்டமான “நீங்களும் நலமா” திட்டத்தினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 6.3.2024 அன்று தொடங்கி வைத்து பயனாளிகளிடம் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் பயனாளிகளை தொடர்பு கொண்டு துறைவாரியாக நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளை கேட்டறிந்தார்கள்.**

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (16.03. 2024) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து பல்வேறு பயனாளிகளை நேரடியாக காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த அவர்களது பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்கள்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மதுரை, தெப்பக்குளத்தைச் சேர்ந்த சி. விஜய் ஆனந்த் அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசி, அவர் இத்திட்டத்தின் மூலம் பெற்ற நன்மைகள் குறித்து வினவினார்.

அப்போது, விஜய் ஆனந்த் அவர்கள் அரசின் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தைப் பற்றி அறிந்து, அதன்மூலமாக மருத்துவமனைக்கான உபகரணங்கள் வாங்கிட தொழில் கடன் பெற்றதாக தெரிவித்தார். மேலும், தொழில் கடன் வேண்டி இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பி த்தவுடன் உடனடியாக அது பரிசீலிக்கப்பட்டு, வங்கியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்த தகவல்களை தெரிவித்து, அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து, எவ்வித தடங்கலுமின்றி விரைவாக 5 கோடி ரூபாய் வங்கிக் கடன் பெற்று, அதன்மூலம் மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது நல்ல பயன்பாட்டில் உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், சுய தொழில் தொடங்கியது குறித்து நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்ட போது, இதுவரை தான் ஒருவருக்கு கீழ் பணியாற்றி வந்ததாகவும், தற்போது தொழில்முனைவோராகி 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருவது மகிழ்ச்சியும், பெருமையும் அளிப்பதாக உள்ளது என விஜய் ஆனந்த் அவர்கள் தெரிவித்தார்.

இந்த திட்டத்தைப் பற்றி உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு தெரிவித்திருக்கிறீர்களா என்று முதலமைச்சர் அவர்கள் கேட்ட போது, தனக்கு தெரிந்த மருத்துவ நண்பர்களுக்கு இதுகுறித்து தெரிவித்திருப்பதாகவும், அவர்கள் அடுத்த மாதம் விண்ணப்பிக்க இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அவரது மருத்துவமனை நல்ல முறையில் செயல்பட்டு, வாழ்வு சிறப்புடன் அமைய முதலமைச்சர் அவர்கள் வாழ்த்தினார்.

மகளிர் சுய உதவிக்குழுவின் கீழ் பயன்பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரைச் சேர்ந்த திருமதி வி. பானுப்பிரியா அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது திருமதி பானுப்பிரியா அவர்கள் தான் ஸ்ரீ முத்துமாரியம்மன் மகளிர் குழுவில் உறுப்பினராக உள்ளதாகவும், மொத்தம் 20 பேர் அதில் உறுப்பினர்களாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

வங்கியிலிருந்து தங்களுக்கு எவ்வளவு கடன் கிடைத்தது, அதை வைத்து என்ன தொழில் செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, திருமதி பானுப்பிரியா அவர்கள், வங்கியிலிருந்து கிடைத்த கடன் தொகையைக் கொண்டு தனது அரிசி கடையை விரிவாக்கம் செய்துள்ளதாக தெரிவித்தார். மேலும், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

சென்னை, வேப்பேரியில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கி பயின்று வரும் திருவண்ணாமலை மாவட்டம், வற்றாபுத்துர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி எஸ். பிரிய தர்ஷினி அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது பிரியதர்ஷினி அவர்கள், தான் வியாசர்பாடிடாக்டர் அம்பேத்கர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B.Sc. (Nutrution) பட்டப் படிப்பு படித்து வருவதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக வேப்பேரி ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கி படித்து வருவதாகவும் தெரிவித்தார். இவ்விடுதியில் தங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கி உள்ளதாகவும் தெரிவித்தார்.

விடுதியில் ஏதாவது வசதிகள் தேவை இருந்தால் தெரிவிக்குமாறும், விடுதியை அதிகாரிகள் அடிக்கடி வந்து ஆய்வு செய்கிறார்களா என்றும் கேட்ட முதலமைச்சர் அவர்களிடம், விடுதியில் தேவையான எல்லா வசதிகளும் உள்ளது என்றும், மூன்று வேளையும் சரியான நேரத்தில் தரமான உணவு வழங்கப்படுவதாகவும், விடுதி பாதுகாப்பாக இருப்பதாகவும், அதிகாரிகள் வந்து ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதம் ரூ.1,000/- உதவித் தொகை பெற்று வருவதாகவும் அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் மாணவி பிரிய தர்ஷினி நன்றாக கல்வி பயின்று வாழ்வில் உயர வேண்டும் என்று வாழ்த்தியதோடு, விடுதியில் தங்கியுள்ள அவரது தோழியர்களுக்கும் தனது வாழ்த்துகளை தெரிவிக்குமாறு கூறினார்.

“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்” பயன்பெற்று வரும் அரியலூர் மாவட்டம், கோவிந்தபுதூரைச் சேர்ந்த திருமதி ராதிகா அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார். அப்போது திருமதி ராதிகா அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதந்தோறும் ரூ.1,000/- உரிமைத் தொகை பெற்று வருவதாகவும் அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தனது மகனுக்கு உதவிடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு முதலமைச்சர் அவர்கள், அவரது மகன் சிகிச்சைக்குத் தேவையான உதவிகளை செய்து தருவதாகவும், கவலைப்பட வேண்டாம் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கடலூர் மாவட்டம், பண்ருட்டியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவி ப்ரித்தா அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது, மாணவி ப்ரித்தா, தனக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை மருத்துவர்கள் வீட்டிற்கே வந்து, அனைத்து பரிசோதனைகளையும் மேற்கொண்டு, மருந்து, மாத்திரைகள் வழங்கி வருவதாகவும், தற்போது உடல் நிலை நன்றாக உள்ளது என்றும் தெரிவித்தார். நல்ல முறையில் படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்திய முதலமைச்சர் அவர்கள், அம்மாணவியின் தந்தையிடம் மகளை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார வியூகம்:

## ‘மகளிர்க்கான கட்டணமில்லா பயணம்’ - ‘காலை உணவுத் திட்டம்’ - ‘புதுமைப்பெண் திட்டம்’ என்கிற

# கழக அரசின் முத்தான மூன்று திட்டங்கள் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

## கொளத்தூர் – திரு.வி.க.நகர் பாக முகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, மார்ச் 18 –**

**மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து பயணம் – பள்ளிப்பிள்ளைகளுக்கான காலை உணவுத் திட்டம் – புதுமைப்பெண் திட்டம் என்கிற கழக அரசின் முத்தான மூன்று திட்டங்கள் பற்றி பிரச்சாரத்தின் போது மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள் என்று – கொளத்தூர் திரு.வி.க. நகர் பாக முகவர்கள் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**சென்னை கொளத்தூரில், சென்னை கிழக்கு மாவட்டம், வட சென்னை நாடாளுமன்றத் தொகுதி, கொளத்தூர் – திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள், பாக நிலை முகவர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது.**

**இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரையாற்றினார்.**

பாக முகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

“இந்தியாவிற்கே ஒரு முதன்மையான முதல்வர்’ என்று நம் முதலமைச்சர் எவ்வாறு பெயர் வாங்கியிருக்கிறாரோ, அதேபோல இந்த கொளத்தூர் தொகுதி, தமிழ்நாட்டுக்கே ஒரு முன்மாதிரியான தொகுதி. அதனால்தான் நாங்கள் இந்தத் தொகுதியில் என்ன நடக்கிறது என்று பார்த்துவிட்டு, எங்கள் தொகுதிக்குச் சென்று ஏதாவது செய்துவிடுவோம்.

**பாக முகவர்கள் கூட்டம்!**

இந்தப் பாக முகவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சியில் எனக்கு இன்னொரு பெருமை என்னவென்றால், இந்த கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர், கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணியில் செயலாளராக இருந்தவர். திரு.வி.க. நகரின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் தாயகம் கவி அவர்களும் எங்களின் இளைஞர் அணியில் இருந்து மாநிலத் துணைச் செயலாளராக இருந்து, இப்போது தலைமைக் கழகத்திற்கு வந்திருக்கிறார்.

இந்தப் பத்து வருடம் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் என்னென்ன வடை சுட்டார் அத்தனையும் உங்களுக்கு அத்துபடி. எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்பை வாங்கித் தருகிறேன் என்று சொன்னார். எத்தனை பேருக்கு வாங்கிக் கொடுத்தார். சி.ஏ.ஜி. என்ற தணிக்கைக் குழு வெளியிட்ட அறிக்கையில், ஒன்றிய அரசு செய்திருக்கக்கூடிய ரூபாய் ஏழரை லட்சம் கோடி செலவுக்கு கணக்கு இல்லை. ரூபாய் ஏழரை லட்சம் கோடி எங்கே சென்றது, என்று யாருக்குமே தெரியவில்லை.

**ஒரே தலைவர்!**

ஒரு கிலோ மீட்டர் ரோடு போடுவதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு ரூபாய் 250 கோடி செலவு காட்டியிருக்கிறார்கள். `ஆயுஷ்மான் பாரத்’ என்ற ஒரு காப்பீட்டுத் திட்டம். அதன் கீழ், இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

இந்தக் கேள்விகளுக்கு மோடி பதில் சொல்லவே இல்லை. மாறாக, சி.ஏ.ஜி. அறிக்கை தயார் செய்த அத்தனை பேரையும் பணியிட மாற்றம் செய்துவிட்டார். இதையெல்லாம் எதிர்த்துக் கேட்கிற ஒரே தலைவர், இந்தியாவிலேயே நம் கழகத் தலைவர் அவர்கள்தான்.

இன்றைக்கு மோடி தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார். கடந்த பத்து நாட்களில் மட்டும் எத்தனை முறை வந்திருக்கிறார் என்றால், ஐந்து முறை வந்திருக்கிறார். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன். ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே, சென்னையில் புயல், எவ்வளவோ பெரிய வெள்ளம் வந்தது. எல்லா இடத்திலும் தண்ணீர் நின்றதே, அப்போது யார் உங்கள்கூட நின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம்தான் மக்களோடு மக்களாக நின்றோம்.

தூத்துக்குடியிலும் அவ்வளவு பெரிய பேரிடர் ஏற்பட்டது. ஒரு வருடம் பெய்யவேண்டிய மழை ஒரே நாளில் பெய்தது. யார் ரோட்டில் நின்று சரி செய்தது. திராவிட முன்னேற்றக் கழகமும் நம் ஆட்சியும்தான். ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே வந்தீர்களா, வந்து பார்த்தீர்களா, அப்போது வரவில்லை.



**6 ஆயிரம் ரூபாய் நிதி!**

குஜராத், அவர் முதலமைச்சராக இருந்த மாநிலம். பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலம். மழை பெய்த அடுத்த நாள் சென்று, அடுத்த நாளே நிதி வழங்கப்பட்டது. ஆனால், நம் தலைவர் இங்கு பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 6 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்.

ஜனவரி மாதம் மட்டும் வெள்ளத்திற்கு 6 ஆயிரம் நிதி ஒதுக்கீடு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய், பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய் என்று ஒவ்வொரு குடும்பத்திற்கு கும் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 8 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார் நம் தலைவர் அவர்கள். 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு கொடுங்கள் என்று உரிமையோடு ஒரு முதலமைச்சர் கேட்கிறார்.

**என்ன தப்பு?**

கேட்டதுக்கு என்ன சொன்னார்கள், ஒன்றிய நிதி அமைச்சர். `பணம் கொடுக்க நாங்கள் என்ன ஏ.டி.எம். மெஷினா?’, என்று கேட்டார்கள். நான் என்ன சொன்னேன். `நாங்கள் என்ன உங்கள் அப்பன் வீட்டு காசையா கேட்டோம்’ என்று கேட்டேன். இதில் ஏதாவது தப்பு இருக்கிறதா, நாம் கட்டிய வரிப் பணத்தைத்தான் நான் கேட்டேன். அந்த அம்மாவுக்கு தூக்கம் போய்விட்டது. டெல்லியில் ஒரு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை வைத்து, ஒரு மணி நேரம் எனக்குப் பாடம் எடுத்தார்கள்.

`உதயநிதி மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்’ என்று சொன்னார்கள். நான் அடுத்த நாளே சொல்லிவிட்டேன். `என்னை மன்னித்து விடுங்கள். மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்களே, உங்கள் மாண்புமிகு அப்பா வீட்டு காசை நாங்கள் கேட்கவில்லை, எங்களின் தமிழ்நாட்டு மக்கள் கட்டியிருக்கக்கூடிய வரிப் பணத்தைத்தான் நான் கேட்கிறேன்’. அந்த நிதி அமைச்சர் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். இதுவரை ஒரு ரூபாய் நிதி கூட வரவில்லை.

ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே, நீங்கள் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன். நாங்கள் கேட்ட எங்கள் மக்களின் வரிப்பணத்தை எப்போது கொடுப்பீர்கள் என்பது மட்டும்தான் என்னுடைய கேள்வி. அவர்கள் நம் நிதி உரிமையைப் பறித்து விட்டார்கள்.

**ஐந்தரை லட்சம் கோடி வரி!**

கடந்த ஆறு வருடத்தில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசுக்கு நாம் எவ்வளவு வரி தெரியுமா கட்டியிருக்கிறோம். ஐந்தரை லட்சம் கோடி. திருப்பி, நமக்கு வெறும் ஒன்றரை லட்சம் கோடி மட்டுமே கொடுத்துள்ளார்கள். நம் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசிற்கு ஒரு ரூபாய் வரி கட்டினோம் என்றால், நமக்கு அவர்கள் திருப்பித் தருவது வெறும் 28 பைசாதான்.

நான் நரேந்திர மோடி அவர்களுக்குப் பெயரே வைத்துவிட்டேன். இனிமேல் நான் உங்களை நரேந்திர மோடி என்று கூப்பிட மாட்டேன். ‘பாரத பிரதமர் திரு 28 பைசா’ என்றுதான் இனிமேல் அவரைக் கூப்பிடப் போகிறேன். இப்போது தேர்தல் வருகிறது என்பதால், வருகிறார்.

இதேபோலத்தான் 2019-இல் மதுரைக்கு வந்தார். உங்களுக்குத் தெரியும், அங்கே என்ன செய்தார் என்று. ஒரேயொரு செங்கலை வைத்துவிட்டு, எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்கள். கொண்டு வந்துவிட்டோம் என்றும் சொன்னார்கள். நான் அந்தப் பக்கம் போகும்போது அந்தக் கல்லையும் தூக்கி வந்துவிட்டேன்.

அதற்கு என்மேல் வழக்கு எல்லாம் போட்டார்கள். உதயநிதி கல்லைத் திருடிக்கொண்டு போய்விட்டார் என்று. நான் சொன்னேன். கல்லைத் திருடினேன் என்று சொல்கிறீர்களே, மருத்துவமனையையே திருடி விட்டேன் என்று சொல்லுங்கள் என்று. இப்போதும் மதுரைக்கு வந்திருக்கிறார். அப்போதும் நாங்கள் எய்ம்ஸ் மருத்துவமனையை மதுரைக்குக் கொண்டு வருவோம் என்று அதே வடையைச் சுடுகிறார்.

**2047-இல் வல்லரசு!**

2014--இல், `2020-ஆம் ஆண்டு இந்தியாவை மாற்றிக் காட்டுவேன்’ என்று சொன்னார். இப்போது திருப்பி அதே வடையைச் சுடுகிறார். என்ன தெரியுமா சொல்கிறார். 2047-இல் இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன் என்று சொல்கிறார்.

நாளை (சனிக்கிழமை) மூன்று மணிக்குத் தேர்தல் தேதி அறிவிக்கப் போகிறார்கள். உங்களிடம் ஆலோசனை வழங்குவதற்கு நான் வரவில்லை. உங்களிடம் வாழ்த்து வாங்குவதற்கு வந்திருக்கிறேன். நான் இன்றைக்கு இந்தப் பிரச்சாரத்தை முடித்துவிட்டுப் போய்விடுவேன். தலைவர் கண்டிப்பாக வருவார். உங்களையெல்லாம் சந்திப்பார். நாங்கள் வந்துவிட்டுப் போய்விடுவோம்.

**தலைவர் அறிவிப்பார்!**

தினமும் மக்களோடு மக்களாக நின்று, மக்களைச் சந்தித்து அவர்களின் வீட்டிற்குள் சென்று இந்தப் பிரச்சாரத்தை செய்யப்போவது என்னுடைய சகோதரிகள், என்னுடைய சகோதரர்கள் நீங்கள்தான். அடுத்த 40 நாள்கள் அதை மட்டும்தான் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தலுக்கும், சென்ற இரண்டு மூன்று தேர்தலுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.

2019-ஆம் ஆண்டு தேர்தல் அப்போது நாம் எதிர்க்கட்சி. எதிர்க்கட்சியாக இருந்தே மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் தேடிக் கொடுத்தார்கள் என்றால், அதற்குக் காரணம் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள்தான். நீங்கள்தான் அந்தப் பிரச்சாரத்தைச் செய்தீர்கள். ஒவ்வொரு வாக்கும் உதயசூரியனுக்கு வரவேண்டும் என்று நம் கலாநிதி வீராசாமி அவர்களை 4.5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் தமிழ்நாட்டிலேயே மூன்றாவது இடத்திலேயே வெற்றிபெற வைத்தீர்கள்.

இந்த முறை தலைவர் உங்களுக்குப் பிடித்த வேட்பாளர், மக்களின் அன்பைப் பெற்ற வேட்பாளர், நிச்சயம் வெற்றி வேட்பாளரை தலைவர் அறிவிப்பார். அது கிட்டத்தட்ட யார் என்று உங்களுக்கே தெரியும். இந்த முறை தமிழ்நாட்டிலேயே அதிகமான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் அந்த வேட்பாளரை வெற்றி பெற வைக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு தலைவர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார், தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் நான்தான் வேட்பாளர். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் வேட்பாளர் என்று தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

அதை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு நாம் வேலை பார்க்க வேண்டும். அதற்காக தலைவர் அவர்கள் ஒரு நல்ல வெற்றி வேட்பாளரைக் கொடுப்பார். நாம் அடுத்த 40 நாட்களுக்கு மனதில் இருக்கக்கூடிய சின்னச் சின்ன சலசலப்புகளை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு உழைக்க வேண்டும். அடுத்த 40 நாட்கள் நம் குறிக்கோள் ஒன்றே ஒன்றுதான். மக்கள் அனைவரும் வாக்குச்சாவடிக்கு வந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வைக்க வேண்டும்.

**கல்வி உரிமை மீட்க...!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு, நீட் நுழைவுத் தேர்வை கொண்டு வந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருக்கும்போது கிராமப்புறங்களில் இருந்து ஏழை, எளிய மாணவர்கள் டாக்டர் படிக்க வேண்டும் என்று, நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் போதும். நாங்கள் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கக்கூடிய பாடம் போதும் என்று நுழைவுத்தேர்வை ரத்து செய்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இன்னும் சொல்லப்போனால், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்தவரைக்கும் கல்வி உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை. நீட்தேர்வை தமிழ்நாட்டிற்குள் நுழைய விடவில்லை. இந்தியாவில் மற்ற மாநிலங்களில் எல்லாம் நீட் தேர்வு வந்துவிட்டது. ஆனால், தமிழ்நாட்டிற்குள் நுழைய விடவே இல்லை. அந்த அம்மா இறந்துபோன பிறகு இங்கு இருந்த அடிமை கும்பல் பா.ஜ.க.வின் வற்புறுத்தலால் நீட் தேர்வைக் கொண்டு வந்து நுழைத்ததின் காரணமாக இதுவரைக்கும் 21 குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். அது தற்கொலை அல்ல கொலை. அ.தி.மு.க.-வும் பா.ஜ.க.-வும் சேர்ந்து செய்த கொலை.

அரியலூர் அனிதாவில் தொடங்கி சென்னை ஜெகதீஷ் வரை பல மாணவர்களை நாம் இழந்திருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையின் வீட்டுக்கும் சென்று நான் ஆறுதல் கூறினேன். இப்போது நம் தலைவருடைய தொகுதியான, கொளத்தூரில் ‘அனிதா அச்சீவர்ஸ் அகாடமி’ அமைத்து அதன் மூலம் பெண் குழந்தைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்து கொண்டிருக்கிறோம்.

**தேர்தல் பணி!**

தனது மகனின் மருத்துவர் கனவு நிறைவேறாமல், வாழ்வை மாய்த்துக்கொண்ட விரக்தியில், அவருடைய தந்தையும் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்டார். நீட்டால் ஒரு குடும்பத்தையே இழந்திருக்கிறோம். இப்படி நாம் இழந்திருக்கிற கல்வி, மொழி உரிமைகளை மீட்டெடுக்க வேண்டுமென்றால், அடுத்த பிரதமராக யார் வர வேண்டுமென்பதை தமிழ்நாட்டு வாக்காளர்கள் முடிவு செய்ய வேண்டும். மக்களை முடிவெடுக்கச் செய்ய பாக முகவர்களாக நீங்கள்தான் களத்தில் இறங்கி தேர்தல் பணியாற்ற வேண்டும்.

எப்படிப்பட்ட நேரத்தில் நாம் ஆட்சிக்கு வந்தோம் என்பதை எண்ணிப் பாருங்கள். கொரோனா பேரிடர் காலத்தில்தான் நாம் ஆட்சிக்கு வந்தோம். அப்போது பிரதமர் மோடி விளக்கு ஏற்றுங்கள், தட்டை வைத்து அடியுங்கள், கோவிட் தொற்று ஓடிப் போய்விடும் என்று மக்களிடையே கூறிக் கொண்டிருந்தார். அந்தப் பேரிடர் சமயத்தில் கூட, தடுப்பூசி செலுத்திக் கொண்டு மக்களைச் சந்தித்த ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் மட்டும்தான். கோயம்புத்தூரில் உள்ள மருத்துவமனையில் பாதுகாப்பு உடைகளை அணிந்து கொண்டு, கோவிட் நோயாளிகள் இருக்கும் வார்டுக்குள்ளேயே சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார். தரமான சிகிச்சை அளிக்க அறிவுறுத்தினார்.

அண்ணன் சேகர் பாபு, அண்ணன் தாயகம் கவி மற்றும் நான் உட்பட பலரும் ஒவ்வொரு வீடாகச் சென்று தடுப்பூசி போடும்படி மக்களை வலியுறுத்தினோம். அதுமட்டுமல்ல, நாம் ஆட்சிக்கு வந்த சமயத்தில், அ.தி.மு.க. அரசு ஏராளமான கடன்களை வைத்து விட்டுப் போயிருந்தது.

**மூன்றே மூன்று திட்டங்கள்!**

ஆனால், அப்படிப்பட்ட நேரத்திலும் நம்முடைய முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதியின்படி, நிறைய திட்டங்களை நிறைவேற்றினார். நம்முடைய அரசைப் பற்றி யாராவது உங்களிடம் கேட்டால், மூன்றே மூன்று திட்டங்கள் பற்றி நான் சொல்லுகிறேன். முதலமைச்சரையோ, நாடாளுமன்ற உறுப்பினரையோ, சட்டமன்ற உறுப்பினரையோ யாராவது விமர்சனம் செய்தால் இதை மட்டும் அவர்களிடம் கூறுங்கள். அதுவே போதுமானது.

கடுமையான நிதி நெருக்கடியிலும் மகளிருக்கான கட்டணமில்லா பயணம் எனும் திட்டத்தைக் கையெழுத்திட்டு நிறைவேற்றினார். கட்டணமில்லா பயணச் சேவையை வழங்கும் பேருந்துகளை அடையாளம் காண பேருந்துகளின் முகப்பில் ‘பிங்க்’ நிறம் பூசப்பட்டது. அந்தப் பேருந்துகளை மக்கள் இப்போது பல இடங்களில் ‘ஸ்டாலின் பஸ்’ என்றே அழைக்கிறார்கள். அந்த அளவுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் மக்களிடம் சென்று சேர்ந்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் மகளிர் மாதம் ஒன்றுக்கு 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். அப்படியானால் ஒரு ஆண்டுக்கு சராசரியாக 11,000 ரூபாய் சேமிக்கிறார்கள். இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 450 கோடி முறை மகளிர் கட்டணமில்லாமல் பயணித்திருக்கிறார்கள்.

**திராவிட மாடல் அரசு!**

அதுதான் இந்த திட்டத்தினுடைய மிகப்பெரிய வெற்றி. தற்போது இந்தத் திட்டத்தை மற்ற மாநில அரசுகளும் அறிமுகப்படுத்தத் தொடங்கிவிட்டன. ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே எடுத்துக்காட்டாக இருப்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு.

இப்படி இன்னொரு திட்டத்தையும் கூறவேண்டும். முன்பெல்லாம் வேலைக்குச் செல்கின்ற பெண்கள் அவசர அவசரமாக காலையில் சமைத்து தன் பிள்ளைகளுக்கு கொடுத்தும், கொடுக்க முடியாமலும் சென்று வந்தார்கள். வேலையில் இருந்து கொண்டு, தன் குழந்தை சரியாக சாப்பிட்டதோ இல்லையோ என்று வருத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள். தாய்மார்களின் அந்தக் கவலையைப் போக்கிய உன்னதத் திட்டம். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகளுக்கு ‘காலை உணவு’ திட்டம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை இப்போது தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்துவிட்டார்.

குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தால், தரமான காலை உணவு அவர்களுக்குக் காத்திருக்கிறது. இந்தத் திட்டத்தையும் பக்கத்தில் உள்ள தெலங்கானா மாநிலத்தில் இருந்து வந்து பார்த்துவிட்டு, எப்படி இதைச் செயல்படுத்துகிறீர்கள் என்பதையும் கேட்டறிந்து சென்றிருக்கிறார்கள். அங்கேயும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தப் போகிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் விரிவாக்கம் செய்ய நம் தலைவர் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்.

**புதுமைப் பெண் திட்டம்!**

அதேபோல, புதுமைப் பெண் திட்டம். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வருவதற்குப் பல முறை யோசித்துக்கொண்டு வராமல் இருந்தார்கள். பெண் குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று தடுத்து வைத்திருந்தார்கள். பெண்கள் படிப்பதற்கு உரிமை கிடையாது என்று கூறி தடுத்து வைத்திருந்தார்கள். இதையெல்லாம் விவாதத்துக்கு உட்படுத்தி, பெண்கள் படிக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது திராவிட இயக்கம். அதன் பலனாகத்தான் இன்று பெண்கள் பலரும் கல்லூரிகளில் படிப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

பெண் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் நின்று விடக்கூடாது, அவர்கள் கல்லூரியிலும் படித்து நல்ல வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்கிற நல்லெண்ணத்துடன், அவர்கள் அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய புதுமைப்பெண் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் செயல்படுத்தினார்.

இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதில் இருந்து பெண்கள் கல்லூரியில் சேர்ந்து படிப்பது 40 சதவிகிதம் அளவுக்கு அதிகமாகி இருக்கிறது. இந்தத் திட்டத்தின் பயன்பாட்டை அறிந்த முதலமைச்சர், இப்போது ஆண்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தை இந்த பட்ஜெட்டில் அறிமுகம் செய்திருக்கிறார். இனி அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரி சேரும் மாணவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் இத்திட்டத்தை முதலமைச்சர் தொடங்கிவைத்தார். ஆரம்பித்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இந்தத் திட்டத்தின் வாயிலாக ஒரு கோடியே 16 லட்சம் பெண்களுக்கு மாதா மாதம் 15 ஆம் தேதி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மூன்று திட்டங்களை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். யாரிடம் பேசினாலும் இந்தத் திட்டங்கள் பற்றி மக்களிடம் பேசுங்கள். மாற்றுக் கட்சியிடம் பேசுங்கள். என்ன குறை இருக்கிறது என்று கேளுங்கள். அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அதை உங்கள் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினரிடம் கூறுங்கள். மக்களோடு மக்களாகப் பழகுங்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி சேர்த்து நாற்பதுக்கு 39 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றோம். இம்முறை 40-க்கு 40 வெற்றி பெறச்செய்து தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

**மனதில் இருந்தே பேசினேன்!**

டெல்லியில் அடுத்து ஆட்சி அமைக்கப்போகும் அடுத்த பிரதமர் யார் என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். 2021--இல் அடிமைகளை விரட்டி வீட்டுக்கு அனுப்பினோம். அடிமைகள் யார் என்பது உங்களுக்கே தெரியும். இந்த முறை அடிமைகளின் எஜமானர்களை விரட்டியடிக்க வேண்டும், அதற்கான நேரம்தான் 2024 நாடாளுமன்றத் தேர்தல். பெயர்களை மட்டும் தான் பேப்பர் பார்த்துப் படித்தேன். மற்ற விஷயங்களை என் மனதில் இருந்தே பேசினேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பாக முகவர்கள் கூட்டத்தில், அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சேமிப்புக் கிடங்கு வாரியத் தலைவர் ப.ரங்கநாதன்,

தொகுதிப் பார்வையாளர்கள் மருத்துவர் யாழினி, கௌதமன், ஐ.சி.ஃஎப். முரளி, தமிழ்வேந்தன், சாமிக் கண்ணு, நாகராஜ், மகேஷ்குமார், ஏகப்பன், புனிதவதி, தேவன், ஆசாத், தேவ ஜவகர், சரிதா மகேஷ்குமார், சட்டத்துறை மாநில துணைச் செயலாளர் சந்துரு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தனசேகர், ஜெகதீஷ், பாலமுருகன், வினோத், ஜி.ஜே.பிரபு, சங்கர் நானா,

சித்திக், அசோக்குமார், துரைக் கண்ணு, துலுக்கானம், ஃபெரோஸ் கான், ராஜா முகமது, மகேஷ், பொதுக் குழு உறுப்பினர்கள் உதயசங்கர், துளசிங்கம், மாமன்ற உறுப்பினர்கள் சாரதா, யோகப்பிரியா தனசேகர், தாவுத்பி, அமுதா பொன்னிவளவன், ஸ்ரீதனி, சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்ச்செல்வி சசிக்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் அதிபதி, எம்.ஜே.சி. பாபு உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




திருமிகு. **எம்.எம்.அப்துல்லா** M.P., திருமிகு. Dr.**வை.முத்துராஜா** M.B.B.S., M.L.A.,

**பெரியண்ணன் அரசு** Ex.MLA, கவிச்சுடர் **கவிதைபித்தன்** Ex.MLA, அஞ்சுகாம **மீனாட்சிசுந்தரம், அரு.வீரமணி, த.சந்திரசேகர், பிடி.அரசகுமார்,** புதுக்கோட்டை **விஜயா,**

**Dr.S.R.அண்ணாமலை, VN.மணி, MS.அசோக் பாண்டியன், KRN போஸ், சு.சண்முகம், சுப.சரவணன், கீரை.தமிழ்ராஜா, M.லியாகத் அலி, பெ.ராஜேஸ்வரி,**

**க.மதியழகன், S.S.கருப்பையா, முக.ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், RR.சாமிநாதன்,** தென்னலூர் **பழனியப்பன், N.சாத்தையா, இராசு.சந்தோஷ்,** வழக்கறிஞர் **R.செல்லதுரை,** ராப்பூசல் **செந்தில் குமார், CRV.சித்ரா,**

**S.திருஞானசம்பந்தம், க.நைனாமுகமது, அ.ரத்தினம், ப.ரங்கராஜன், M.மணிவேலன், முத்தழகு பழனி வேலு, சேட்டு** (எ) **ஷாஜகான், A.ராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க.அறிவுடை நம்பி, MM.பாலு,**

**இராம.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், K.கணபதி, M.வேலுச்சாமி, P.சண்முகம்** E.B., **Dr.மு.க.முத்துக்கருப்பன், ராய.முத்துகுமார்,** புதுநகர் **குமார், T.அப்புகாளை,** தென்றல் **சேகர், கி.சுப்பிரமணியன்,**

**M.காதர்கனி, Er.மு.அரவிந்த் B.E, R.சின்னதுரை, R.தனபால், சிற்றரசு,** ஹைவேஸ் **செந்தில்,** கம்பன் நகர் **ரமேஷ்,** நிஜாம் காலனி **பிரபு, V.G.பத்மநாபன், விஜயகுமார்** ஆசிரியர், **C.T.சாத்தப்பன், A.வெற்றிச்செல்வன்**

நகரக்கழக முன்னோடிகள்: SA.ஆதிமூலம், அக்ரோ செல்வம், வழக்கறிஞர் அறிவுரைநம்பி, தட்டாம்பட்டி ஆறுமுகம், மச்சுவாடி கலையரசன், SVR.ராஜா, D.தயாளன் M.A.,M.Phil., M.Ed., அருண் B.A., B.L., கவிஞர் பெர்னாட்ஷா, முகமது ஆசாத், பொன்.ஆதிசங்கர், A.பாண்டியன், M.ராஜேந்திரன், ஜெயபால் சுயிஞர்.வீ.ம.இளங்கோவன் சி.லெட்சுமணன், தேவ குணசேகரன், Dr.கனகராஜ், V.முகமது இப்ராகிம், செல்லப்பன், சி.ராமச்சந்திரன் M.நாகராஜன், செல்வக்குமார் செல்லப்பன், ஆட்டோ பழனிவேல், A.அர்ச்சுனன், சுப்பையா, சந்திரசேகரன் Ex MC, ராமன், முத்தழகு, அகமது பாசி, முகமது ரபீக், AVS.ஜின்னா சன் செய்து, நெப்போலியன், சோமையா, கருப்பையா, சர்வேயர் கோபால், M.சதீஸ்குமார் G.சௌந்தர்ராஜன், மங்கர் செல்வம், N.அசோக்குமார் R.ரவிச்சந்திரன், N.பரமன், S.கிஷோர்குமார், இள.மாஹி, BR.கனிமொழி,

வட்டக்கழக செயலாளர்கள் : SMA.அறிவழகன், ஆர்.ரமேஷ், செ.நாகராஜன், கண்மணி சுப்பு, எஸ்.செல்வம், எஸ்.ராமச்சந்திரன், பூக்கடை முருகேசன், ரவிஸ் ரவி, கே.எம்.எஸ்.குமார், கா.இளங்கோவன், த.பிரேம் ஆனந்த், சு.தெட்சிணாமூர்த்தி, முகமது ஆசிப், எம்.எஸ்.முகமது ரபிக், கே.செல்லையா, செ.இளங்கோவன், வே.செல்வராஜ், ம.ஆனந்த், கே.சரவணன், நவீன் ஆண்டனி, ச.அருண்குமார் ஆர்.எம்.எஸ்.சத்யா, கோ.ஆறுமுகம், ஜெ.ரவிச்சந்திரன், சுப.கார்த்திக், எம்.கிருஷ்ணன், எஸ்.பாலு, சி.மாரியப்பன், எ.தியாகு, VATC.ராஜேந்திரன், வாஹித் அலி, டி.கதிரேசன், க.பிரபு, எ.கே.அண்ணாத்துரை, சு.முத்துக்கருப்பன், கேபிர்.J.சுரேஷ்குமார்

நகர்மன்ற உறுப்பினர்கள் : S.வளர்மதி சாத்தையா, R.பழனிவேலு, S.அடைக்கலம், கனகஅம்மன் பாபு, லதா ராமலிங்கம், அனுராதா அறிவுடைநம்பி, சி.மதியழகன், S.கார்த்திகைச்செல்வி புதுநகர் குமார், மெஸ்.மூர்த்தி, M.பால்ராஜ், செந்தாமரை பாலு, M.ஜாஹிர் உசேன், காந்திமதி பிரேம்ஆனந்த், வே.ராஜேந்திரன், க.கவிவேந்தன், R.ராஜேஸ்வரி ராஜேந்திரன், மெஹர்பானு நிஜாம், M.தெய்வானை மகேந்திரன், SNM.ராஜாத்தி,

நகர இளைஞரணி நிர்வாகிகள்: செ.கணேஷ், R.ஆசைத்தம்பி, ஹரிஹரன், ஞானவேல், மகேந்திரன், கார்த்திக், ஜெரால்டு நிக்கேஷ்

வட்ட கழக பிரதிநிதிகள்: வீ.கருப்புசாமி,முத்துலெட்சுமி மணிகண்டன், அறிவலை ரமேஷ், வி.செந்தில்குமார், பியூட்டி B.கலா, எஸ்.செல்வராஜ், உமா மகேஸ்வரி சரசு அடைக்கலம், வி.வீரக்குமார், எஸ்.குமாரவேல், எஸ்.மீனாள், எஸ்.அப்துல்லா, கோ.முத்துலெட்சுமி, மகேஸ்வரி சீனிவாசன் அழகு சீனிவாசன், சி.செல்லத்துரை, ஜெயந்தி மார்டின், எம்.தாய்தீன், கமலா அன்புச்செல்வன், சி.பாரி, தெய்வானை குணசீலன் எம்.ரவி, பூபதி, தீபா நடராஜன், புத்தி ராஜேந்திரன், மாரிக்கண்ணு செங்கமலம், சுப்பிரமணியன், வசந்தி சேகர், வே.விஜயகுமார் ஜெயலெட்சுமி குமார், எஸ்.மதியழகன், ராஜேஸ்வரி சீனிவாசன், சண்முகவள்ளி, சித.ராஜா, கே.சீனிவாசன் காந்திமதி ஆனந்த் காசிநாதன், விஜயலெட்சுமி முத்துக்குமரன், செந்தில் குமார், சாந்தி ரவிச்சந்திரன், ஆர்.தங்கசாமி, அனுராதா பத்மநாதன் உதயகுமார்,எஸ்.அறிவகம், K.செந்தில் குமார், செல்வி ஆதிராகவன், ஜெகதாம்மாள், ஜாஸ்மின் ரன்தீர் முகமது உ.அன்சர் கவிதா மருதமுத்து, பி.ஜெயகுமார், அருள்மொழி, டி.சித்ரா திருநாவுக்கரசு, எ.எல். கணேசன், சிவயோகினி ராதாகிருஷ்ணன் மணிமேகலை அப்புக்காளை, கே.ராமு, பி.முத்துலெட்சுமி, மி, மீசை ஆரோக்கியசாமி, அடைகம்மை மாதவன் ஜெஸிமாபேகம்

**ஆ.செந்தில்** மாநகர கழக செயலாளர், புதுக்கோட்டை. மேயர் **திலகவதி செந்தில்** B.com.,



விருதுநகர் அரசு போக்குவரத்து கழக மண்டல அலுவலகத்தில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட பணியாளர்கள் ஓய்வு அறையினை திறந்து வைத்து , பயிற்சி மையத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நவீன கணினி ஓட்டுநர் திறன் மேம்பாட்டு சாதனத்தை துவக்கி வைத்தார்கள் .

### நாகையில் 957பயனாளிகளுக்கு

# ரூ.4.24 கோடியில் இலவச வீட்டு மனைப் பட்டா!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்! என்.கௌதமன், உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, மார்ச் 18-

நாகை மாவட்டம் நாகை ஒரத்தூரில் உள்ள அரசு மருத்தவக் கல்லூரி மருத்துவமனையில் 1,081 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம்வர்கீஸ் தலைமை தாங்கினார்.

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சட்டத்துறை மற்றும் நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சாலை, ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ.ரகுபதி கலந்து கொண்டு 957 பயனாளிகளுக்கு ரூபாய் 4 கோடியே 24 லட்சத்து 72 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டா மற்றும் மாவட்ட பிறப்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் சமுதாயத்தை சேர்ந்த 28 பயனாளிகளுக்கு ரூ.2.03 லட்சம் மதிப்பிலான மீன் மோட்டார் பொறுத்திய இலவச தையல் இயந்திரங்களையும், சமூக நலத்துறை சார்பில் 91 பயனாளகளுக்கு ரூ.6.70 லட்சம் மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களையும், தாட்கோ துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ. 31.47 லட்சம் மதிப்பிலான கடன்களுக்கான ஆணை என 1,801 பயனாளிகளுக்கு ரூ. 5.04 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

அவர் பேசியது வருமாறு:-

குடிசைகள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற லட்சிய கனவோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடிசை இல்லா தமிழகத்தை உருவாக்க முதல் கட்டமாக முத்தமிழ் அறிஞர் கலைஞர்அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு அடிப்படைப்படையாக அந்த இல்லத்தை கட்டுவதற்கு பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா அவசியம், வீடு அவசியம் என உணர்ந்து கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

விலையில்லா வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். விலையில்லா வீட்டு மனை பட்டாவை தவிர அந்த இடத்திற்கு விலை மதிப்புள்ளது. அந்த அளவிற்கு விலை மதிப்புள்ளதாக அந்த இடத்தை விலை மதிப்புள்ளதாக பயனாளிகளக்கு தமிழ்நாடு முதலமைச்சர் தருகிறார்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். 957 நபர்களுக்கு தரப்படுகின்ற வீட்டு மனை பட்டாவின் மதிப்பு ரூ. 4 கோடியே 24 லட்சத்து 27 ஆயிரம். பல கோடி மதிப்பிலான இடத்தைதான் தருகிறோம். அதில் நீங்கள் வீட்டை கட்டிக்கொண்டு கலைஞரின் கனவு இல்லத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆசை.

நம்முடைய முதல்வர் அவர்கள் 2030க்குள் 8 லட்சம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டி முடிக்க வேண்டும். தமிழகத்திலே குடிசைகள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில் பயன்படுத்த வேண்டும் என்பது முதலமைச்சரின் விருப்பம் ஆகும். இதில் முன்னுரிமை என்பது குடிசை வீட்டில் வாழ்ந்து வருபவர்களுக்கு முதல் உரிமை வழங்கப்பட்டு வீடுகள் கட்டி தரப்படும். ஏன் என்றால் அவர்களால் தான் குடிசை வீடுகள் இல்லாத தமிழகத்தை உருவாக்க முடியும். அதற்கு அரசின் சார்பில் ரூ. 3.5 லட்சத்தை தருகின்ற முதலமைச்சராக நம்முடைய முதமைச்சர் இருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

பாரத பிரதமர் வீட்டு வசதி திட்டம் என்று சொன்னாலும் கூட அதிக பணம் கொடுப்பது மாநில அரசு தான் என்பது நாடு அறிந்த உண்மை. ஆனால் அந்த திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு திட்டம் என்ற பெயர் வைக்க வில்லை. பாரதபிரதமர் வீட்டு வசதி திட்டம் என்றுதான் பெயர் வைத்துள்ளோம். ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு எல்லாம் பெயரை மாற்று வைக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு இதுவே உதாரணம். குறைவான நிதியை ஒன்றிய அரசு கொடுக்கிறது. அதிக நிதியை தமிழ்நாடு அரசு கொடுக்கிறது. ஆனால் நாங்கள் உங்கள் திட்டம் என்று தான் சொல்கிறோம். மாநில அரசின் திட்டம் கலைஞர் கனவு இல்லம் என்ற திட்டம். ஆனால் நாங்கள் பாரதபிரதமர் வீட்டு வசதி திட்டத்திற்கு கலைஞர் கனவு இல்லம் திட்டம் என்ற நாங்கள் அழைப்பதில்லை. எங்களுக்குள்ள உரிமையை தான் எடுத்துக் கொள்கிறோம் அடுத்தவர்கள் உரிமையில் நாங்கள் கை வைக்கும் பழக்கம் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடையாது. திராவிட மாடல் முதல்வருக்கு கிடையாது என்பதை தெரிவித்து கொள்கிறோம். திராவிட மாடல் கொள்கை என்பது எல்லோருக்கும் எல்லாம் என்கிறது தான் திராவிட மாடல்.

எல்லோருக்கும் எல்லாம் பெற்று தரும் உன்னத நோக்கோடு இன்று இந்தியாவை நோக்கி தமிழகத்தில் இருந்து பார்த்து கொண்டு இருக்கிறோம். இந்தியாவில் எல்லா மக்களுக்கும் அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் பெற வேண்டும். எல்லோரும் நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தான் தமிழக முதலமைச்சரின் நோக்கமாகும், செயலாளரும், சிந்தனையாலும் நிறைவேற்ற முழு முயற்சி எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறோம். நாகை மாவட்டத்தை பொறுத்தவரை இது மூன்றாவது நிகழ்ச்சி முதல் நிகழ்ச்சியிலேயே 1,100 பேருக்கு விலையில்லா விட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மயிலாதுறை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 600 பேருக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது. இப்பாது 956 பேருக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா என நாகை மாவட்டத்தில் மொத்தம் 2,657பேருக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. இது கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் வீட்டு மனை பட்டா இல்லாதவர்களுக்கு அதிக அளவில் வீட்டு மனை பட்ட வழங்கப்பட்டுள்ளது. விட்டுமனை பட்ட அதிக அளவில் வழங்கப்பட்டுள்ள அரசு நமது திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசுதான். அந்த அளவிற்கு ஏழை, எளியவர்களை எண்ணி பார்த்து, சிந்தித்து பார்த்து செயல்படுகிற முதலமைச்சர் கோட்டையில் இருக்கின்ற காரணத்தால் தான் ஓலை குடிசையில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கு வழங்க வாய்ப்பு திராவிட மாடல் அரசுக்கு கிடைத்திருகிறது.

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்துவது தான் திராவிட மாடல் அரசின் நோக்கம். ஏழைகள் மற்றவர்களுக்கு இணையான வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம் ஆகும். இந்த திட்டத்திற்கு நாகை, வேதாரண்யம், கீழ்வேளூர் தொகுதியில் தனியாரிடம் அதாவது மூன்றாவது தரப்பிடம் இருந்து இடம் விலை கொடுதது வாங்கி வழங்கிட அதற்கு நிதி ஒதுக்கீடு ரூ.51 லட்சம் அரசானை வழஙகப்பட்டுள்ளது. மூன்றாவது நபர்களிடம் இருந்து இடங்களை அரசு விலை கொடுத்து வாங்கி அதை விலையில்லா வீட்டு மனை பட்டாவாக வழங்குவது நாகை மாவட்டத்தில் தான் முதன் முதலாக தொடங்கப்பட்டுள்ளது. இதனால் வீட்டு மனை இல்லாத எழை எளிய மக்கள் விட்டு மனை பெறவும், பேரிடர் காலத்தில் பாதுகாப்பான குடியிருப்பை பெற்று தரவும் இந்த திட்டம் உதவும் . யார் யாருக்கெல்லாம் சொந்த இடம் இல்லையே அவர்களுக்கு விட்டு மனை வழங்குவது இந்த அரசின் தலையாய பணி, கடன், கடமையாகும். இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மராமுத்து, ஒன்றியக் கழகச் செயாளர்கள் மகா.குமார், உதயம் வே.முருகையன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், ஒன்றிய துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, நாகை நகரக் கழக துணைச் செலயாளர் வெற்றிலைகடைசிவா, மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, ஊரட்சி முகமை கூடுதல் ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், சமூக பாதுகாப்பு திட்ட மாவட்ட தனித் துணை ஆட்சியர் கார்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் ரூபாய் 2 கோடியே 50 லட்சம் மதிப்பில் புதிய அரசு பள்ளி வகுப்பறை கட்டிடம் மற்றும் புதிய அங்கன்வாடி கட்டிடம் சமையல் கூட கட்டிடங்களை உதயசூரியன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சங்கராபுரம் ஒன்றிய குழு பெருந்தலைவர் திலகவதி நாகராஜன், தெற்கு ஒன்றிய செயலாளர் நா.ஆறுமுகம்,ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தி கணேசன் ரீனா சரவணன், மல்லாபுரம் கிளைக் கழக செயலாளர் எம்.பச்சையா ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மாவட்ட ஒன்றிய கிளைக்கழக திமுக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை கிழக்கு மேலூரில்

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, மார்ச் 18-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டில் நாற்பதும் நமதே நாடும் நமதே என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற தேர்தலில் பணியாற்ற வேண்டும், இந்தியா கூட்டணி சார்பில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மதுரை நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி வேட்பாளராக சு.வெங்கடேசன் போட்டியிட உள்ளார். அதனை முன்னிட்டு மதுரை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மதுரை கிழக்கு மற்றும் மேலூர் தொகுதியில் வேட்பாளர் அறிமுக கூட்டம் வரும் 20 மற்றும் 21 ஆம் தேதி நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார், அதன் விபரம்



தமிழ்நாட்டில் வரும் நாடாளுமன்ற தேர்தல் ஏப்ரல் 19 ஆம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் கழகத் தலைவர், மக்கள் போற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆதரவு பெற்ற இந்தியா கூட்டணி கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். என்ற நோக்கோடு வேட்பாளர் அறிமுக கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

அதன்படி மதுரை நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட மதுரை கிழக்கு தொகுதியில் வேட்பாளர் அறிமுக கூட்டம் வரும் 20.03.2024 புதன் கிழமை மாலை 4.30 மணி அளவில் ஆலத்தூர் பி.ஆர். திருமண மண்டபத்திலும், மதுரை நாடாளுமன்றத்துக் குட்பட்ட மேலூர் தொகுதியில் வேட்பாளர் அறிமுக கூட்டம் 21.03.2024 மாலை 4:30 மணி அளவில் மேலூர் மூவேந்தர் பண்பாட்டு கழக திருமண மண்டபத்திலும் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

எனவே இவ்விரு கூட்டத்திலும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,துணைஅமைப்பாளர்கள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள்என அனைவரும் தவறாது கலந்து கொண்டு நாடாளுமன்ற தேர்தல் பணியை எழுச்சியுடன் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத் தினருக்கு தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மு.ஞானவேலன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், பி.எம்.ஸ்ரீதர் பங்கேற்பு!

# செம்பனார்கோயில் ஒன்றியத்தில் புதிய கட்டிடங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மயிலாடுதுறை,மார்ச் 18-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனர்கோயில் ஒன்றியத்தில் மடப்புரம், நெடுவாசல், கூடலூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி செயலக கட்டிடங்கள், மின் மாற்றிகள் திறப்பு விழா மற்றும் ரூ.2.25 மதிப்பில் தானியக்கிடங்கு மற்றும் வீர சோழன் ஆற்றின் குறுக்கே திருவிளையாட்டத்தில் பாலம் கட்டும் பணி அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

விழாவில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும்,பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு மாமாக்குடியில் ரூ. 50 லட்சம் செலவில் விவசாய தானியக் கிடங்குக்கு அடிக்கால் நாட்டியும், ரூ. 1.42 கோடி மதிப்பீட்டில் மடப்புரம் ஊராட்சி மன்ற செயலக கட்டிடம், ரூ.1.42கோடி மதிப்பில் கட்டப்பட்ட குரும்பூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற செயலக கட்டிடம், நெடுவாசல் ஊராட்சியில் ஊராட்சி ரூ. 1.39 லட்சம் மமதிப்பில் கட்டப் பட்ட ஊராட்சி செயலக கட்டிடம், கூடலூர் ஊராட்சியில் ரூ.1.42 கோடியில் கட்டப்பட்ட ஊராட்சி செயலக கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத்தும், திருவிளையாட்டம் வீர சோழனாற்றில் குறுக்கே பாலம் கட்டி தந்தால் பொறையார்மங்கை நல்லூர் சாலையில் இருந்து குரும்பங்குடி கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் சுற்றி வரும் அளவு குறையும் என பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து ரூ 1.75 கோடி மதிப்பில் புதிய பாலம் கட்ட பூமி பூஜை செய்து கட்டுமான பணியை தொடங்கி வைத்தும், திருவிளையாட்டத்தில் புதிதாக இரண்டு மின் மாற்றுகள் அமைக்கப்பட்டுள்ளதை இயக்கி வைத்தும், விளாகம் அரசு பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தும், எரவாஞ்சேரி அரசு பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தும், திருக்களாச்சேரி ஹமிதியா மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவி களுக்கு விலையில்லா சைக்கில்களை வழங்கியும் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு தலைவர் தலைவர் நந்தினிஸ்ரீதர், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், மாவட்ட பிரதிநதிகள் தென்னரசன், ஈச்சங்குடி இளங்கோவன், ஜி.ஆ. பிரபாகர், சிவக்குமார், ஒன்றிய துணைச் செலயாளர்கள் அன்பழகன், இளங்கோவன், பொருளாளர் சரவணன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் திருக்கடையூர்செந்தில், ஒன்றிய குழு உறுப்பினர் மடப்புரம் கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோபி, அன்பழகன் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் - திருச்சி இடைநில்லா பேருந்து சேவை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மார்ச் 18-

அரியலூர் மாவட்டம், அரியலூர் அண்ணாசிலை அருகில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம் சார்பில் அரியலூர் திருச்சி (11) இடைநில்லா பேருந்து சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப அரியலூர் திருச்சி (11) இடைநில்லா பேருந்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட் கோட்ட மேலாளர் (பெரம்பலூர்) ஆர்.ராமநாதன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், வட்டாட்சியர் அரியலூர் ஆனந்தவேல், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், நகரகழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக் குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், முன்னாள் நகர்மன்ற தலைவர் விஜயலட்சுமி செல்வராஜ்,தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, தொமுச பழனிசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண் ராஜா, வழக்கறிஞர்கள் இராஜா,பாலா, நகர நிர்வாகிகள் மாலா தமிழரசன், இராஜேந்திரன், குணா, மணிவண்ணன், உத்திராபதி, குமார்,காந்தித்மதி சுப்ரமணியன், ஒன்றிய மகளிர் அணி கனிமொழி,

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள்மற்றும் அரசு அலுவலர்கள்,மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பு!



மதுரை மாநகர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் இன்று (18.03. 2024-திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் பசுமலை கோபால் சாமி திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** :

நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக

மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் தோழர் சு.வெங்கடேசன் அறிமுகக் கூட்டம்

**கோ.தளபதி எம்.எல்.ஏ.**
செயலாளர்,
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, பனமலைப்பேட்டை ஊராட்சியில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய குழு தலைவர் கலைசெல்வி , ஒன்றிய செயலாளர்கள் முருகன், ஆர். பி.முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நரசிம்மன், சீனுவாசன், குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் கவிதா, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஒன்றிய கவுன்சிலர் பாரதி சசிகுமார்,ஊராட்சி மன்ற தலைவர் கல்யாணசுந்தரம் ராமச்சந்திரன், துணை தலைவர், ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம் சாத்தம்பாக்கம் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுல் விஜயன், மாதனூர் ஒன்றிய குழு தலைவர் சுரேஷ் குமார், ஒன்றிய குழு துணை தலைவர் சாந்தி சீனிவாசன், மாதனூர் மத்திய ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளர் எம்.டி.சீனிவாசன், குடியாத்தம் ஒன்றிய கழகச் செயலாளர் கல்லூர் ரவி, ஒன்றிய குழு உறுப்பினர் தீபா ராஜன் பாபு, ஊராட்சி மன்ற தலைவர் கலாவதி புருஷோத்தமன் மற்றும் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வார்டு கவுன்சிலர்கள், பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் திரளாக பங்கு பெற்றனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகம். கலைஞர் மாளிகையில் நாடாளுமன்ற தேர்தலை யொட்டி, வார் ரூமை கழக வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர். இளங்கோ. எம்.பி. குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஜி. கே.சுபரசு, பொருளாளரும் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மு.கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சி. ராஜேந்திரன், கே.டி.மணி, மாநில வழக்கறிஞர் அணி இணைச் செயலாளா' ரவிச்சந்திரன், ஜி. குமரவேல், மாநகர செயலாளர் பா. ரகுபதி, தொ. மு. ச தலைவர் வி மணி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ராம் பிரகாஷ், மாநகர அமைப்பாளர் சீனிவாசன், துரைராஜ், பழனி முருகன், வஸ்தாத் கிருஷ்ணன், விஜயகுமார், நாகராஜ் குப்புசாமி, தமிழரசன், யுவராஜ் உட்பட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திறந்து வைத்தார்!

# குன்னம் தொகுதியில் புதிய அரசு போக்குவரத்துப் பணிமனை!

## சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன் - சொ.க.கண்ணன் - கு.சின்னப்பா - மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

பெரம்பலூர், மார்ச்,18-

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மானிய கோரிக்கையில் அறிவித்தபடி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) திருச்சி மண்டல இயக்கப் பகுதியில் உள்ள பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களுக்கு கூடுதலாக பேருந்து வசதி செய்யும் வகையில், குன்னத்தில் புதிய அரசுப் பேருந்து பணிமனையினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் போக்குவரத்து துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தலைமையில் திறந்து வைத்தார். கும்பகோணம் கோட்டத்தில் முதல் பெண் ஓட்டுநருக்கு அரசுப்பணிக்கான நியமன ஆணையை அமைச்சர் வழங்கினார்.

இதில் போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு சிறப்பான வாய்ப்பினை வழங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தொகுதிகளிலும் பணிமனை அமையாமல் உள்ளது. இன்னும் சில பெரிய தொகுதிகளில் பணிமனை கூடுதலாக வேண்டும் என்ற கோரிக்கை நிலுவையில் உள்ளது. ஆனால் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு இந்த தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான வாய்ப்பை வழங்கியுள்ளார்கள்.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் மிக முக்கியமான பத்து கோரிக்கைகள் சேகரிக்கப்பட்டு அதில் மிக முக்கியமான கோரிக்கைகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். குன்னம் சட்டமன்ற தொகுதியை பொறுத்தவரை முதன்மை கோரிக்கையாக புதிய பேருந்து பணிமனை வேண்டும் என கேட்கப்பட்டது. இந்த பணிமனை அமைந்தால் குன்னம் சட்டமன்ற தொகுதியில் இருக்கும் குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதி பரவலாக கொண்டு சேர்க்க முடியும். ஒரு சில கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் இருந்தாலும் பள்ளி கல்லூரி பயிலும் மாணவர்கள் சென்று வருவதற்கு கூடுதலாக பேருந்துகளை இயக்க இயலும். குன்னம் பகுதி மக்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள வாய்ப்பு தான் இந்த புதிய பேருந்து பணிமனை.

இரண்டாவது முக்கிய கோரிக்கையாக இந்த பகுதியில் மக்காச்சோளத்தின் விலை குறைவாக இருப்பதால் அதன் மதிப்பு கூட்டப்பட்டு விற்பனை செய்யும் வகையில் இந்த ஆண்டே தொழில் நிறுவனம் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். மேலும் கூட்டுக் குடிநீர் திட்டம் தேவை என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் அடிப்படை பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாய்ப்பு கொடுத்துள்ள தால் தான் இது போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுகிறது. இந்தப் பேருந்து பணிமனை அமைப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்பாக திட்டமிட்டு இன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த நாள் என் வாழ்க்கையில் ஒரு பொன்னாள்.

குன்னம் சட்டமன்ற தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. முழுவதும் கிராமங்கள் நிறைந்த பகுதி. இந்தத் தொகுதி முன்னேறுவதற்கு வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டும் என திட்டமிட்டு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மக்களோடு நெருக்கமாக பணியாற்றுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு முன்னேறிச் செல்லும் நோக்கத்தில் அமைச்சர் பெருமக்களும் பயணம் செய்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் குன்னம் சட்டமன்ற தொகுதியிலும் அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் வகையில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனைத் தொடர்ந்து பணி காலத்தில் இறந்த பணியாளர்களின் 40 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 25 ஆண்டுகள் 10 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லா பேருந்து இயக்கம் செய்த 29 ஓட்டுநர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களையும் வழங்கிய போக்குவரத்துத் துறை அமைச்சர் 10 புதிய பேருந்து வசதிகளையும் தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட ஆட்சியர் க.கற்பகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.ஷ்யாம்ளாதேவி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம். பிரபாகரன் (பெரம்பலூர்), கு.சின்னப்பா (அரியலூர்), கா.சொ.க.கண்ணன் (ஜெயங்கொண்டம்), மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, சார் ஆட்சியர் சு.கோகுல், மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர் பட்டுச்செல்வி ராஜேந்திரன்,

ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் என். கிருஷ்ணமூர்த்தி (ஆலத்தூர்), மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), ஒன்றிய செயலாளர்கள் தி.மதியழகன், சி. ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர்கள் ஏஎஸ். ஜாஹிர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மருத்துவர் அ.கருணாநிதி, சாலை போக்குவரத்து நிறுவன உதவி இயக்குநர் (சென்னை) ச.சக்திவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருச்சி மண்டல பொது மேலாளர் அ.முத்துகிருஷ்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்(லிட்) பெரம்பலூர் கோட்ட மேலாளர் ராமநாதன், குன்னம் வட்டாட்சியர் கோவிந்தம்மாள், குன்னம் ஊராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி மதியழகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் நகராட்சிப் பூங்காவில்

# "எல்லோருக்கும் எல்லாம்" என்ற அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார்!

நாமக்கல், மார்ச் 18-

நாமக்கல் நகராட்சி பூங்கா சாலையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், அமைக்கப் பட்டிருந்த "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப் படக் கண்காட்சி துவக்க விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு, மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்", ஏழை, எளிய பெண்களின் உயர்கல்வியை ஊக்குவித்து உறுதி செய்திடும் "புதுமைப் பெண் திட்டம்", உலகை வெல்லும் இளைய தமிழகத்தை உருவாக்கிட கல்லூரிப் படிப்புடன் வேலைவாய்ப்புக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கிடும் "நான் முதல்வன் திட்டம்", பள்ளி செல்லும் குழந்தைகள் களைப்பின்றி பயில "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்", பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் செய்திட "விடியல் பயணம் திட்டம்", மாநிலம் முழுவதும் வேறு மாவட்டங்களிலிருந்து வந்து நகரங்களில் தங்கி பணிபுரியும் பெண்களின் நலன் மற்றும் பாதுகாப்பிற்காகத் "தோழி" தங்கும் விடுதிகள், போன்ற பல்வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்யும் நோக்குடன், மக்கள் மற்றும் அரசுக்கிடையேயான இடைவெளியைக் குறைத்திடும் வகையில், "மக்களுடன் முதல்வர்", "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" "நீங்கள் நலமா" உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

மேற்படி "எல்லோருக்கும் எல்லாம்" என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்ற அரசு நிகழ்ச்சிகள், அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 150 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் அடங்கிய அரசின் சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரசின் சாதனை விளக்க ப்புகைப்படக்கண்காட்சி தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை வரை 7 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தே.ராம்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) த.வடிவேல், நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி புதுச்சேரி நகராட்சிக்குட்பட்ட கொம்பாக்கம் வார்டில் கொம்பாக்கம் பிள்ளையார் கோயில் வீதி, பாலாஜி நகர் கார்னர் முதல் சுடுகாட்டு சாலை முடியும் வரை பொதுப்பணித்துறை மத்திய கோட்டம் மூலம் ரூ. 2 கோடியே 17 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக தார்ச்சாலை அமைக்கும் பணி, சுடுகாட்டு சாலையின் இருபுறமும் சிமெண்ட் மதில் சுவர் அமைக்கும் பணி மற்றும் கொம்பாக்கம் அம்மன் குளம் முதல் நெசவாளர் நகர் வரை ரூ. 48 லட்சத்து 54 ஆயிரம் மதிப்பீட்டில் தார்ச்சாலை என ரூ. 2 கோடியே 65 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் சாலை அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்ப்புச் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்துகொண்டு தார்ச்சாலை அமைக்கும் பணியினை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் வே. ஆல்பன்

### மார்ச் 18 (1999)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றியவர்.

திருவட்டாறு ஒன்றியத் தலைவராகவும் பின்னர் திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடிநிலையின்போது மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

"இனிய இயல்பினர், எவரிடத்தும் பண்புடன் பழகக்கூடிய மனப்பக்குவமுடையவர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பூந்தமல்லியில் ரூ. 6 கோடி மதிப்பில் நவீன விளையாட்டு அரங்கம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர் மார்ச் 18 -

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி நகராட்சி பேரறிஞர் அண்ணா பள்ளி வளாகத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூ. 6 கோடி மதிப்பில் நவீன விளையாட்டு அரங்க கட்டுவதற்கு ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ தலைமை தாங்கி பணிகளை துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்

பூந்தமல்லி பகுதியில் மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் பயன்படும் வகையில் மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வந்தார். இது தொடர்பாக பல்வேறு துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு கொடுத்தும் வலியுறுத்தி வந்தார்.

இந்த நிலையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதைடுத்து பூந்தமல்லி அறிஞர் அண்ணா ஆண்களை மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நவீன வசதிகளுடன் புதிய விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர், சென்னை பெருநகர வளர்ச்சி குழும செயற் பொறியாளர் ராஜன்பாபு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், தலைமை பொறியாளர் ரவிக்குமார், நகர் மன்ற உறுப்பினர் தீபா யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே.டி. கூடலரசன்

### மார்ச் 18 (1999)



பள்ளிப் பருவத்திலேயே தி.மு.கழகப் பேச்சாளராக விளங்கியவர்.

இவர் அரசுப் பணியில் இருந்துகொண்டே கழகப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால், அன்றைய அரசால் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர். அப்படி நீக்கிய பின்னரும், அதற்காக வருந்தாது, மேலும் எழுச்சியுடன் கழக மேடைகள் தோறும் கொள்கை முரசம் செய்தவர்.

முரசொலி உள்ளிட்ட பல பத்திரிகைகளில் கட்டுரை எழுதி பெயர் பெற்றவர்.

தொ.மு.ச. அமைப்பில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தொழிலாளர்களின் நலன் காக்க பாடுபட்ட இவர், சாலை விபத்தில் மரணமடைந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



